விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1417)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 05 புதன்கிழமை (17.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 060

## சடலங்களை தகனம் செய்வதில் மாற்றம் இல்லை

அமைச்சர் உதய கம்மன்பில

9 ஆம் பக்கம் பார்க்க

உருமாறிய கொரோனா அச்சுறுத்தல்

## திருமணம், மரணச்சடங்குகளுக்கு மீண்டும் கட்டுப்பாடு அமுல்

15 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் நடைபெற்றது தமிழின படுகொலையே!

ஐ.நா மனித உரிமை சபையின்
முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை

3 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவுக்கு எதிர்ப்பு சீனாவுக்கு மௌனமா?

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கேள்வி



(கொழும்பு)
இந்தியாவுக்கு கிழக்கு முனையத்தை வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் தற்போது சீனாவுக்கு எல்லாவற்றையும் வழங்க முனைவதை எதிர்க்காது மௌனம் காக்கின்றனர் என முன்னாள் 19

வீதியில் சென்றவரை அச்சுறுத்தி

## ரூ.9 இலட்சத்து 75 ஆயிரம் பணம் கொள்ளை

### வவுனியாவில் பட்டப்பகலில் சம்பவம்

(வவுனியா)
வவுனியா புளியங்குளம் பகுதியில் வீதியில் சென்றவரை அச்சுறுத்தி ஒன்பது இலட்சத்து 75 ஆயி 19

### கோவிட் - 19
பலி 6
தொற்று +756

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 6 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். 19

### யாழ்.செம்மணியில் வீதி விபத்து முதியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
நேற்றுமுன்தினம் 19

# வடக்கின் 3 தீவுகள் சீனாவுக்கே வழங்கப்படும்

## அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு



*(கொழும்பு)*
*சூரிய மின் நிலையங்களை அமைப்பதற்கு வட மாகாணத்தில் உள்ள 3 தீவுகளும் சீன நிறுவனங்களுக்கே வழங்கப்படும் என அமைச்சரவை இணைப் பேச்சாளார் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். இந்த தீர்மானத்தில் மாற்றம் எதுவும் மேற்கொள்ளப்படாது என தெரிவித்த அமைச்சர் இதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளதாக்வும் சுட்டிக் காட்டினார்.*

*(5ஆம் பக்கம் பார்க்க)*

பேருந்துகளில் எழுமாற்றுப் பரிசோதனை

## ஆசிரியை உள்ளிட்ட ஐவருக்கு வடக்கில் கொரோனா உறுதி

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தில் நேற்றைய தினமும் ஐந்து பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
யாழ் .போதனா 19

## தடுப்பூசி செலுத்தப்பட்ட சுகாதார ஊழியருக்கு

### கொரோனா தொற்று உறுதி

(கொழும்பு)
இலங்கையில் கோவிட் தடுப்பூசி செலுத்திய பெண் ஒருவர் கோவிட் - 19 தொற்றுக்குள்ளான நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளார். 19

கடற்படையின் தேவைக்காக

## காரைநகரில் பாடசாலையின் காணி அபகரிக்க முயற்சி

### அளவீட்டுப் பணிகள் இன்று

(யாழ்ப்பாணம்)
காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் இன்று காணி அபகரிப்பிற்கான அளவீட்டு பணிகள் நடைபெறவுள்ளன.
வலந்தலை, ஜே 47 19

மன்னாரில் காணாமல்போன

## யாழைச் சேர்ந்த மீனவர் மாலைதீவில் கரையொதுங்கினார்


(யாழ்ப்பாணம்)
மன்னார் கொன்னையன் குடியிருப்புப் பகுதியில் கடந்த 31ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற வேளை காணாமல் போன 3 மீனவர்களில் ஒருவர் மாலைதீவு கடற்பரப்பில் படகுடன் நேற்று 19

## தொடர் வாந்தி இளைஞன் மரணம்

### நல்லூர்ப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
தொடர்ச்சியாக 19

# மரண அறிவித்தல்



தோற்றம்
08 * 06 * 1937

மறைவு
16 * 02 * 2021

# ஐயம்பிள்ளை அப்புக்குட்டி

(காந்திஜீ சனசமூக நிலையத்தின் ஆரம்பகால முன்னாள் தலைவர்)

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு காந்திஜீ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை அப்புக்குட்டி நேற்று (16.02.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகம்மா மற்றும் திரவியம் ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகர், மாணிக்கம், பொன்னாச்சி, செல்லையா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான லஸ்சுமி, பூரணம், கந்தசாமி நாகரத்தினம், விஷாலாட்சி, சின்னராசா மற்றும் செல்லத்துரை, யோகம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ரவீந்திரா, பவீந்திரா, தயாபரராஜா, காலஞ்சென்ற செல்வகுமார் (சுட்டி), விமலினி, வினோதினி, கருணதாசன் (பெரியதம்பி), ஜீவகாந்தன் (பாடகர் - ஜீவா), விஜயகாந்தன் (விசி), ராஜீவ்காந் (செல்லக்கிளி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவலிங்கம், கனகராசா, நவனேஸ்வரன், பாஸ்கரன், செல்வி, அபிராமி, சர்ளியா, அனுலா, இலங்கீதா ஆகியோரின் பாசமிகு மாமனும் மற்றும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.02.2021) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காந்திஜீ வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(5597)

077 282 4047
075 268 6856

தகவல்:-
குடும்பத்தினர்

# இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே

# இலங்கை விவகாரத்தில் ஐ.நா. தீர்க்கமாக

# செயற்பட வேண்டிய முக்கிய தருணம் இது

## தவறவிட வேண்டாம் என்கிறார் நவநீதம்பிள்ளை

(கொழும்பு)

**இலங்கையில் 2009 முடிவடைந்த உள்நாட்டுப் போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்புக் கூறும் நோக்கம் இல்லை என்பதை இலங்கை அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது. இந்நிலையில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை இந்த விடயத்தில் தீர்க்கமாகச் செயற்பட வேண்டிய நேரம் இது என முன்னாள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை ஆணையாளர் நவநீதம் பிள்ளை தெரிவித்துள்ளார்.**

தற்போதைய ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உயர் ஸ்தானிகர்கள் பொறுப்புக்கூறலின் ஒரு விரிவான செயல் முறைக்கு அழைப்பு விடுத்து வலுவான அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

அடுத்தடுத்த ஐ.நா. அறிக்கைகளின் அடிப்படையில், "இலங்கை அரசு சர்வதேச குற்றங்களைச் செய்ததற்கான நம்பகமான சான்றுகள்" உள்ளதை கோடிட்டுக் காட்டியுள்ளன.

இந்நிலையில் பொறுப்புக் கூறல் மற்றும் நீதி வழங்கும் பொறிமுறைகளை இலங்கை தொடர்ந்து மறுத்து வருவதை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டிய நேரம் இது எனவும் நவநீதம்பிள்ளை தெரிவித்தார்.

2008முதல் 2014 வரை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளராக பணியாற்றிய நவநீதம்பிள்ளை யுத்தத்தின் இறுதிக் கட்டங்களிலும் அந்தக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட மனிதாபிமான நெருக்கடியை நிவர்த்தி செய்வதில் தனது அலுவலகத்தின் பங்கு குறித்தும் சர்வதேச ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் அதன்போது தெரிவிக்கையில்,

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்துக்கொண்டிருந்த வேளை எறிகணை தாக்குதலிற்கு உள்ளான மருத்துவமனைகளின் மருத்துவர்களின் உதவிக்கான இறுதி அழுகுரலை நாங்கள் செவிமடுத்திருக்கின்றோம் என அதில் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி ஆறு மாதங்களும் பல முறை சர்வதேச தொலைக்காட்சிகளில் வெளியாகியுள்ளன.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர்கள் என



குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வெள்ளைக் கொடியைக் காண்பித்த வேளையிலும் இலங்கை இராணுவம் அவர்கள் சுட்டுக் கொல்வதை பார்த்திருக்கின்றோம்.

தமிழ் பொதுமக்கள் மீதான கடுமையான விமான குண்டு வீச்சுகளையும் அவர்களின் வீடுகள், மருத்துவமனைகள், கோவில்கள், அடைக்கலம் கோரிய இடங்கள் அழிக்கப்பட்டதையும் நாங்கள் பார்த்திருக்கின்றோம்.

பயங்கரவாதிகள் என குற்றஞ்சாட்டப்படுபவர்கள் கைது செய்யப்பட்ட பின்னரும் இந்த தாக்குதல் இடம்பெற்றது என அவர்மேலும் தெரிவித்தார்.(நி-4)


WANTED - தேவை
HOTEL SENIOR Suppervisior & Assistants
Jaffna-Colombo

With at last 2 Years experience in a senior posision, staff MANAGEMENT capacity with the knowledge of three languages an advantage. further activities related to the Industry would henhance the application

சமையல் வெற்றிடங்கள்




Chef cook
கோழி/இறால் புக்கை
புளிக்கஞ்சி
அப்பம்/ரொட்டி வகைகள்
ஜூஸ் (Juice)
உழுத்தம் களி/
கஞ்சி சூப்/கூழ்
என எமது பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் இதர உணவு தயாரிக்க முழு நேரமாகவோ பகுதி நேரமாகவோ தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உணவு/தங்குமிட வசதிகளுடன் அனுபவமும் வேலை திறனிற்கு ஏற்ப சம்பளம் தரப்படும்.

நேர்முகத் தேர்வு-19.02.2021, 20.02.2021 காலை 10 மணி

யாழ்பாடி,
51, அம்மன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
021 222 6868
077 736 0353
(c-1446)


## பதில் சுகாதார அமைச்சராக பேராசிரியர் ஜயசுமன



(கொழும்பு)

பதில் சுகாதார அமைச்சராக பேராசிரியர் சன்ன ஜயசுமன நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இவர், ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் இராஜாங்க அமைச்சராக செயற்பட்டிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இவர் பதில் சுகாதார அமைச்சராக நியமனம் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

## புதிய வைரஸ் தொற்று 16 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் மரபணு மாற்றம் பெற்ற புதிய கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 16 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சைபிரஸ், டுபாய் மற்றும் ஜோர்தானில் இருந்து இலங்கைக்கு வந்தவர்களிடையே இந்த புதிய தொற்று கண்டறியப்பட்டது.

கண்டுபிடிக்கப்பட்ட 16 பேரில் 13 பேர் இராணுவத்தின் தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-4)


மணமகன் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உயர் பதவி வகிக்கும் 30 வயதுடைய தாவர போசணம் உண்ணும் மணமகளுக்கு மணமகன் தேவை. பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
077 575 9514
(5575)

# 'சர்கார்' அக்ஷர்; 'மாஸ்டர்' அஷ்வின்

## சென்னையில் இந்தியா இமாலய வெற்றி

## இங்கிலாந்தின் தொடர் வெற்றி பறிபோனது

சென்னையில் நடந்த 2ஆவது டெஸ்டில் அக்சர் படேல் 5 விக்கெட்டுக்களை வீழ்த்த, இந்திய அணி 317 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது. இங்கிலாந்து அணியின் தொடர்ச்சியான 6 வெற்றிகளுக்கு வைக்கப்பட்டது முற்றுப்புள்ளி.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்டில் தோற்ற இந்தியா 0-1 என, பின்தங்கி இருந்தது. இரண்டாவது டெஸ்ட் சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடந்தது.

முதல் இன்னிங்ஸில் இந்தியா 329, இங்கிலாந்து 134 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்சில் இந்திய அணி 286 ஓட்டங்கள் எடுத்தது. பின், 482 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களை எடுத்திருந்தது.

**அக்சர் அசத்தல்**

நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணிக்கு இந்திய பந்துவீச்சாளர்கள் தொல்லை கொடுத்தனர். தனது முதல் பந்தில் லோரன்ஸை (26) ஆட்டமிழக்கச் செய்த அஷ்வின், 'சகலதுறை வீரர்' பென் ஸ்ரோக்ஸையும் (8) 'பெவிலியனுக்கு' அனுப்பி வைத்தார்.

அக்சர் படேல் 'சுழலில்' போப் (12) சிக்கினார். குல்தீப் யாதவ் பந்தில் பென் போக்ஸ் (2) வெளியேறினார். தொடர்ந்து அசத்திய அக்சர் படேல் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களை அடிச்சு தூக்கினார். இவரது பந்தில் அணித் தலைவர் ஜோ ரூட் (33) வெளியேறினார். பின் ஸ்டோனை (0) ஆட்டமிழக்கச் செய்து தனது 5ஆவது விக்கெட்டை கைப்பற்றினார்.

**மொயீன் 'சரவெடி'**

அஷ்வின் வீசிய 54ஆவது ஓவரில் தொடர்ச்சியாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய மொயீன் (43 ஓட்., 18 பந்து, 5 சிக்சர், 3 பவுண்டரி), குல்தீப் பந்தில் ஆட்டமிழந்தார்.

இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 164 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 317 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. நினைச்சது போல சேப்பாக்கத்தில் வென்ற இந்திய அணி, முதல் டெஸ்டில் சந்தித்த தோல்விக்கு பதிலடி கொடுத்தது. தொடர் 1-1 என, சமநிலை அடைந்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் அக்சர் படேல் 5, அஷ்வின் 3, குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகன் விருதை 'சகலதுறை வீரராக' அசத்திய தமிழக வீரர் அஷ்வின் வென்றார். மூன்றாவது டெஸ்ட் (பகலிரவு ஆட்டம்) வரும் பிப். 24இல் அகமதாபாத்தில் தொடங்குகிறது.




ரசிகர்களை நோக்கி கையசைத்து ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கிறார் இந்திய அணித் தலைவர் ஹோலி

ஓம் ஜோதிஸ்வரூபனே சரணம் ஐயப்பா!

## கண்ணீர் அஞ்சலி

மூளாயூரிலும் – சுழிபுரம் மேற்கிலும் வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற ஐயனார் கோவில்களில் திருமேனி தீண்டி தன்னலம் அற்ற தெய்வப்பணி புரிந்த

சிவஸ்ரீ
**பாலசுப்ரமணியஐயர் கருணாகரஐயர்**



தோற்றம் 29.06.1970 மறைவு 13.02.2021


அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஸ்ரீ தர்ம சாஸ்தாவைப் பணிகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தங்க. முகுந்தன் (குருசாமி)
மூளாய் - சபரி ஸ்ரீ ஐயப்பன் யாத்திரைக்குழு (C-1451)

## மரண அறிவித்தல்

## பாலசுப்பிரமணியம் கேசவன்



பிறப்பு 1989-03-06 இறப்பு 2021-02-16

5ஆம் வட்டாரம், மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல. 62A/3 வைமன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் கேசவன் நேற்று (2021.02.16) செவ்வாய்க்கிழமை காலமானார்

அன்னார் பாலசுப்பிரமணியம் - இராஜலட்சுமி தம்பதிகளின் பாசமிகு அருமை மகனும் கமலவாசகி (கிளிநொச்சி), சத்தியா (சுவிஸ்), மீனலோசினி (கனடா), கார்த்திகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவானந்தம் (UNHCR, கொழும்பு), கருணாகரன் (சுவிஸ்), ஜெயச்சந்திரா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் பரணிகா (கிளிநொச்சி), தரணிகா (கிளிநொச்சி), அனொய்ன்ரினா (சுவிஸ்), அனொய்ன்ரன் (சுவிஸ்), கிறைஸ் (சுவிஸ்), இவொன் (சுவிஸ்), ஏஞ்சல் (கனடா), எமிலி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயலட்சுமி, வரதலட்சுமி, புஸ்பா ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற யோகேஸ்வரனின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (2021.02.17) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 62A/3, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (C-1452)

தகவல்: செ.பாலசுப்பிரமணியம் (தந்தை)
077 696 4821

# வடக்கு தீவுகளை சீனாவுக்கு வழங்கும் திட்டத்தில் மாற்றம் எதுவும் இல்லை என்கிறார் உதய கம்மன்பில

(கொழும்பு)

**வட பகுதியில் உள்ள 3 தீவுகளை சீனாவுக்கு வழங்கும் திட்டத்தில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின் போது அமைச்சரவை இணைப் பேச்சாளர், அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**



விலைமனு கோரலின் அடிப்படையில் சீன நிறுவனத்திற்கு அதனை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அந்த அமைச்சரவை தீர்மானத்தை தாமதப்படுத்துவதாகவோ அல்லது இரத்துச் செய்வதாகவோ மின்சக்தி அமைச்சர் அமைச்சரவைக்கு அறிவிக்காதமையால் அந்த தீர்மானம் தொடர்ந்தும் வலுவில் உள்ளது என்பதாகவே நினைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் கடற்படை முகாமை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பாதுகாப்பை அவ்வாறே பேணுமாறு ஜனாதிபதி கூறியிருக்கின்றமையால் இது ஒரு பிரச்சினையாக மாற்றமடையாது என அமைச்சர் தெரிவித்தார். (நி-4)

# பா.ஜ.க ஆட்சி அமைப்பது வெறும் கட்டுக்கதை

(கொழும்பு)

இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி இலங்கையில் ஆட்சியமைக்கும் திட்டத்தில் இருக்கின்றது என வெளியாகும் தகவல்கள் வெறும் கட்டுக்கதையே என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

திரிபுரா மாநில முதலமைச்சர் பிப்லாப் குமார் வெளியிட்டுள்ள கருத்தானது உத்தியோகபூர்வமானது அல்ல எனவும், இதனால் இது தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாட்டைக் கூற முடியாது எனவும் அமைச்சரவை இணைப்பேச்சாளரான அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

உத்தியோகபூர்வமாக பாரதிய ஜனதாக் கட்சி அவ்வாறு அறிவிக்குமாக இருந்தால் இலங்கை அரசு அது பற்றி பதிலளிக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# வீடு திரும்பினார் சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்குள்ளாகி கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பூரணமாக குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பினார். (நி-4)

# வீதியோரத்தில் நஞ்சருந்திய நிலையில் தாயும் இரு குழந்தைகளும்

(தம்புள்ள)

தம்புள்ள, யாபாகம பகுதியில் தாயொருவர் தனது இரண்டு குழந்தைகளுக்கும் நஞ்சூட்டி தானும் நஞ்சருந்திய சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தம்பதியினரிடையே ஏற்பட்ட குடும்பத் தகராறின் விளைவாகவே, குறித்த தாய் தனது ஒன்று மற்றும் மூன்று வயதுடைய இரண்டு குழந்தைகளுக்கும் விஷம் கொடுத்துள்ளார்.

பிரதான வீதியோரத்தில் இவர்கள் கீழே விழுந்த நிலையில் காணப்பட்ட போது பிரதேச வாசிகள் கண்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இரு குழந்தைகளின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (நி-4)

# வெள்ளைக்கொடி விவகாரத்தை அடியோடு மறுக்கும் கோட்டா அரசு



(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களை கொலை செய்ததாக, போர்க்குற்றங்கள் மற்றும் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஸ்டீபன் ராப் தெரிவித்த விடயத்தை, இலங்கை ஜனாதிபதி அலுவலகம் முற்றாக நிராகரித்துள்ளது.

இலங்கையில் கடந்த 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த சந்தர்ப்பத்தில், பாதுகாப்பு செயலாளராக பணியாற்றிய தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த விடயத்தை ஒப்புக்கொண்டதாகவும், கொழும்பில் பின்னாளில் தன்னைச் சந்தித்த போது, அவர் தன்னிடம் இந்த விடயத்தை தெரிவித்திருந்ததாகவும், ராப் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், ராப்பின் கூற்று எவ்வித அடிப்படையும் அற்றது என ஜனாதிபதி அலுவலகம் விளக்கமளித்துள்ளதாக, கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியான நாளேட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமெரிக்க அதிகாரி பதவி விலகி ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் இதுபோன்றதொரு அறிக்கையை வெளியிடுவதற்கான நோக்கத்தை ஜனாதிபதி அலுவலகம் கேள்விக்குட்படுத்தியுள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போதைய குற்றச்சாட்டு ஜெனிவா அமர்வுகளுக்கானது எனவும், இலங்கையை இழிவுபடுத்தும் பிரசாரத்தின் ஒட்டுமொத்த பகுதியாகும் எனவும் ஜனாதிபதி அலுவலகம் குற்றம் சுமத்தியுள்ளது. (நி-4)

# ஏ.ரி.எம் அட்டைமூலம் பணமோசடி செய்தவர் கைது

(காலி)

வைத்தியர் ஒருவரின் ஏ.ரி.எம் அட்டையின் மூலம் சுமார் 10ஆயிரம் ரூபா பணத்தை மோசடியாக பெற்ற நபரொருவரை காலி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் பூஸா, கெந்தவல பிரதேசத்தைச் சேர்ந்த சுற்றுலா வழிகாட்டி ஆவார்.

மேற்படி வைத்தியர் காலி நகரிலுள்ள வங்கிக் கிளையொன்றுக்கு சென்று ஏ.ரி.எம் இயந்திரத்தில் பணத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவ்விடத்தில் ஏ.ரி.எம் அட்டையை மறந்து வைத்துவிட்டுச் சென்றுள்ளார்.

அதன்பின்னர் ஏ.ரி.எம் இயந்திரத்தை நோக்கி வந்த சந்தேகநபர், அங்கிருந்த அட்டையைக் கொண்டு சுமார் 10ஆயிரம் ரூபாய் பெறுதியான மதுபானம், உணவு பொருட்களை கொள்வனவு செய்துள்ளதாக விசாரணைகளி லிருந்து தெரிய வந்துள்ளது.

தனது அட்டையைக் கொண்டு பணம் பெறப்பட்டுள்ளதாக தனது கைப்பேசிக்கு கிடைத்த குறுந்தகவல் தொடர்பில் மேற்படி பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு அளித்துள்ளார்.

அதற்கமைய விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் குறித்த வர்த்தக நிலையத்துக்கு சென்று அங்குள்ள பாதுகாப்பு கமராக்களில் பதிவான காட்சிகளின் மூலம், வைத்தியரின் அட்டையைக் கொண்டு பொருட்களை கொள்வனவு செய்தவரை அடையாளம் கண்டுள்ளனர். (நி-4)

# தடுப்பூசியைப் பெற மறுத்த எம்.பிக்கள்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் திட்டம் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் சில எம்.பிக்கள் தடுப்பூசியைப் பெறுவதற்கு மறுத்துவிட்டனர்.

தடுப்பூசி செலுத்தும் திட்டம் பொதுமக்கள், முன்னணி ஊழியர்கள் மற்றும் கொவிட்டினால் அதிகளவாக பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என தெரிவித்தே, அவர்கள் இவ்வாறு தடுப்பூசியை பெறுவதற்கு மறுத்துவிட்டனர்.

அதன்படி ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, ஹேஷ விதானகே மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகிய எம்.பிக்களே இவ்வாறு தடுப்பூசியை பெற மறுத்தவர்கள் ஆவர்.

எவ்வாறெனினும் ஐக்கிய மக்கள் சக்தியின் திஸ்ஸ அத்தநாயக்க, திலிப் வேதாராச்சி மற்றும் மயந்த திஸாநாயக்க ஆகியோர் தடுப்பூசியை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வேலைவாய்ப்பினை உடன் வழங்கக்கோரி

# சித்த மருத்துவ பட்டதாரிகள் சங்கத்தினால் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

**வேலையற்ற அனைத்து சித்த வைத்திய பட் டதாரிகளுக்கும் உடனடியாக வேலைவாய்ப்பினை வழங்கக்கோரி வேலையற்ற சித்த வைத்திய பட்டதாரிகள் சங்கத்தினால் கவனயீர்ப்பு போராட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டது.**

குறித்த போராட்டம் நேற்று மதியம் கைதடியில் அமைந்துள்ள யாழ்.பல்கலை. சித்த மருத்துவ அலகிற்கு முன்பாக இடம்பெற்றது.




போராட்டத்தில் கலந்து கொண்ட சித்த மருத்துவ பட்டதாரிகள் "அனைத்து வேலையற்ற சித்த வைத்திய பட்டதாரிகளுக்கும் உடனடியாக வேலைவாய்ப்பு வழங்கவும், தேர்தல் வாக்குறுதி வெறும் பேச்சில் மட்டுமா?, இன்னும் எத்தனை காலம் தான் இழுத்தடிப்பு?, எல்லாத் துறைகளுக்கும் வேலை வழங்கும் அரசே எம்மை நிராகரிப்பதேன்?, கனவுகளோடு காத்திருக்கும் எமக்கு அரசின் பதில் என்ன?

பட்டதாரிகளின் பட்டம் வீட்டிலேயே முடக்கப்படுமா?, சுதேச மருத்துவம் நாட்டிற்கு தேவையில்லையா?, ஆறு வருட படிப்பு நடுத்தெருவில் நிற்கவா?" போன்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் சித்த மருத்துவ வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் சித்த வைத்திய பட்டதாரிகள், சித்த வைத்திய உள்ளக பயிற்சி மாணவர்கள், உள்ளக பயிற்சிக்கு காத்திருக்கும் மாணவர்கள் மற்றும் சித்த மருத்துவ அலகு மாணவர்கள் கலந்து கொண்டனர். நாட்டில் சித்த மருத்துவ துறையில் வெற்றிடங்கள் நிலவுகின்ற போதிலும் கடந்த 2016 ஆம் ஆண்டிற்கு பின் சித்த மருத்துவத் துறையினருக்கு எந்தவிதமான வேலைவாய்ப்பும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5-4-30-33)

## கந்தபுராண படிப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங் கேஸ்வரர் ஆலயத்தில் நாளை மறுதினம் 19 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 7 மணிப் பூசையைத் தொடர்ந்து கந்தபுராணப் படிப்பு ஆரம்பமாகும் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (5-4)

## சுகாதார சீர்கேடுகளை பார்வையிட்டார் மாநகர முதல்வர்



(குருநகர்)

குருநகர் தொடர்மாடி குடியிருப்பில் மலசலகூடத்தின் மலக்கழிவு நீரினால் ஏற்படும் சுகாதார சீர்கேடு சம்பந்தமாக தொடர்மாடி சனசமூக நிலையத்தின் செயலாளரினால் யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கு மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

மாநகர முதல்வர் அவ்விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் நேரடியாக விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டார்.

அதனையடுத்து மாநகர முதல்வர் உரிய திணைக்களத்துடன் தொடர்புகொண்டு அதனைச் சரி செய்வதாகவும் கூறியதைத் தொடர்ந்து மேலும் சில கோரிக்கைகள் அவரிடம் முன்வைக்கப்பட்டன. (5-4-100)

## தென்மராட்சியில் "கிராமத்திற்கு ஒரு வீடு" திட்டத்தில் பத்து வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டன

(சாவகச்சேரி)

"கிராமத்திற்கு ஒரு வீடு" திட்டத்தின் ஊடாக தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பத்து வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டன.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் வழங்கப்படும் குறித்த வீட்டுத்திட்டங்களுக்கான அடிக்கல்லை யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜனின் இணைப்பாளர் எஸ். உதயசீலன் நாட்டி வைத்தார்.



மேலும் இந் நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களான க.வேலாயுதபிள்ளை, ப.நந்தகோபால், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் தி.தங்கவேலு, வீடமைப்பு அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.(5-4-30)

## போக்குவரத்து நெரிசலை தவிர்க்க பொலிஸார் நடவடிக்கை எடுக்கவும்

(கரணவாய்)

நெல்லியடி பகுதியில் பாடசாலை முடிவடையும் நேரத்தில் வாகன நெரிசலை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையால் காலை 7 மணி முதல் 8 மணி வரைக்கும், பிற்பகல் 1 மணி முதல் 2 மணி வரைக்கும் நெல்லியடி மத்திய கல்லூரி வீதியில் கனரக வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாரதிகளின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், நெல்லியடி பொலிஸாருக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது பாடசாலைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றபோதும் இவ் வீதியூடாக வாகனங்கள் செல்வதனால் போக்குவரத்து நெரிசல்கள் உண்டாகின்றன.

இவ் வீதியை பாடசாலை முடிவடையும் நேரத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை என பல பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துவதனால். மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே நெல்லியடி பொலிஸார் இது தொடர்பாக கவனம் எடுக்குமாறும் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-60)

## கொவிட்-19 சிகிச்சை நிலையத்தில் பரீட்சை எழுதும் பல்கலை. மாணவி

(நல்லூர்)

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொவிட்-19 சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வரும் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவி தனது ஆண்டு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விசேட ஏற்பாடுகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

பதுளையைச் சேர்ந்த கலைப்பீட மாணவி ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகிய நிலையில், கடந்த வாரம் அடையாளப்படுத்தப்பட்டிருந்தார். அதனையடுத்து அவர், யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொவிட் 19 சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

குறித்த மாணவி சக மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் அதே நேரத்தில், சிகிச்சை நிலையத்தில் குறித்த மாணவியும் பரீட்சை எழுதுவதற்கான ஏற்பாடுகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தரின் அறிவுறுத்தலுக்கு அமைய, கலைப் பீடாதிபதி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதற்கு கொவிட் -19 சிகிச்சை நிலைய நிர்வாகம் ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. (5-4-33)

# மணிவிழா வாழ்த்து



## திரு. இராமச்சந்திரன் திரவியநாதன்

BA, Dip in. Edu, M.A, SLPS I

பிரதி அதிபர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

**சேவை விபரம்**

யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்
1989.05.15-1992.07.30

தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம்
1992.09.01.-1993.01.05

யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்
1993.01.07-1993.08.31

யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்
1993.09.01-1995.10.06

வ/ தமிழ் மகா வித்தியாலயம்
1995.10.07-1997.10.05

யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்
1997.10.07-2005.01.05 (ஆசிரியர்-உப அதிபர்)

யா/கோப்பாய் மகா வித்தியாலயம்
2005.01.06-2006.01.07

யா/இந்துக் கல்லூரி
2006.01.08-2015.05.14 (ஆசிரியர் - பகுதித்தலைவர்)

யா/மத்திய கல்லூரி
2015.05.15-2021.02.17
(பிரதி அதிபர்)

(9694)

மணிவிழா நாயகனை மனமார வாழ்த்துகின்றோம்

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முன்னாள் ஆசிரிய நண்பர்கள்**

# அறிமுகமாகின்றது.......

The Next generation EVRO RO System

## உலகத் தரம் வாய்ந்த EVRO® நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்

Best forever.....




நீங்கள் அருந்தும் நீரில் அடங்கியுள்ள மேலதிக கல்சியம், மக்னீசியம், மாசுக்கள் மற்றும் கொடிய நோய் தொற்றுக் கிருமிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள EVRO® நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை இன்றே பொருத்திப் பயன் பெறுங்கள்.

ASIA SUPER HEALTH BRAND

FREE
1. Installation
2. Service & Maintenance
3. Warranty

இறக்குமதி செய்து விநியோகிப்போர் : நீர் சுத்திகரிப்பு துறையில் முன்னோடியும், சுற்றாடல் அதிகார சபையினால் அங்கிகரிக்கப்பட்டதுமான

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
Professional in Total Water Management
HOTLINE : 075 331 3310

| JAFFNA | KILINOCHCHI | VAVUNIYA |
|---|---|---|
| NO.581, K.K.S ROAD, JAFFNA, SRI LANKA. TEL : 021 222 6888 | NO.677, A9 ROAD, KARADIPOKKU JUNCTION, KILINOCHCHI. TEL : 021 228 4888 HOTLINE : 077 844 7280 | NO.65, VAIRAVAKOVIL ROAD, VAIRAVAPULIYANKULAM, VAVUNIYA. TEL : 024 222 6008 HOTLINE: 075 331 3303 |

(C-1447)

## திருக்கேதீஸ்வரத்தில்

# மன்னார் மாவட்ட மக்களுடன் மட்டும் இம்முறை மஹா சிவராத்திரி விழா



(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வர மஹா சிவராத்திரி விழாவின் போது கொரோனா தொற்றை கருத்தில் கொண்டு வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தருகின்றவர்களை தவிர்த்து மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களின் பங்களிப்புடன் மஹா சிவராத்திரி விழாவை கொண்டாட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில் மன்னார் திருக்கேதீஸ்வர மஹா சிவராத்திரி விழா தொடர்பாக விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன்போது பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதி இடம்பெற உள்ள திருக்கேதீஸ்வர மஹா சிவராத்திரி விழாவினை சுகாதார முறையினை கடைப்பிடித்து எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

இதன்போது பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

வெளிமாவட்டத்தில் இருந்து வருகை தருகின்றவர்களை தவிர்த்து மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களின் பங்களிப்புடன் மஹா சிவராத்திரி விழாவை கொண்டாட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வெளி இடங்களிலே இருந்து இம்முறை வருகைதர உள்ள மக்கள் தமது இடங்களிலே சிவராத்திரி நிகழ்வை அனுஷ்டிக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கொரோனா தொற்றின் பரவலைத் தடுக்கும் வகையில் திருக்கேதீஸ்வர மஹா சிவராத்திரி விழாவின் போது பாலாவி தீர்த்தக்காவடி நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலின் போது திணைக்கள தலைவர்கள், திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குருக்கள், ஆலய நிர்வாக சபையினர், பொலிஸார், சுகாதார துறையினர் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (5-4-285)

# வவுனியா வைத்தியசாலைக்கு ஒன்பது வைத்தியர்கள் நியமனம்

(நெளுக்குளம்)

வவுனியா வைத்தியசாலைக்கு 9 வைத்தியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் காண்டீபன் தெரிவித்தார்.

மத்திய சுகாதார அமைச்சினால் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை உட்பட பிரதேச வைத்தியசாலைகளிற்கு 11 வைத்திய உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனத்தில் வவுனியா பொது வைத்தியசாலைக்கு 9 வைத்தியர்களும், செட்டிகுளம் மற்றும் நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைகளிற்கு ஒவ்வொரு வைத்தியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா பொது வைத்தியசாலையில் மகப்பேறு, இரத்த வங்கி உட்பட பல்வேறு துறைகளை சேர்ந்த 9 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் 8 பேர் நேற்று கடமைகளை பொறுப்பேற்றுள்ளதுடன் ஒருவர் எதிர்வரும் நாட்களில் பொறுப்பேற்பார் என்று வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் காண்டீபன் தெரிவித்தார். (5-4-299)

# 10 கிலோ கஞ்சாவுடன் இரண்டு பேர் கைது

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதங்கேணி கடல் பகுதியில் பருத்தித்துறை பகுதிக்கு கடல் மார்க்கமாக கொண்டு வரப்பட்ட 10கிலோ கஞ்சா வுடன் இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 10கிலோகஞ்சா மற்றும் கஞ்சா கடத்துவதற்கு பயன்படுத்திய இயந்திர கப்பல் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி M.D குணரட்ன தெரிவித்தார் (5-4-316)

# மேய்ச்சல் தரவைகளை வழங்குமாறு கோரிக்கை

(பூநகரி)

பூநகரியில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ள நிலையில் அவற்றை மேய்ப்பதற்கு மேய்ச்சல் தரவைகள் இல்லாத நிலையில் பண்ணையாளர்கள் பெரும் சிரமம் அடைவதாகவும் மேய்ச்சலுக்கான தரவைகளை ஒதுக்கி தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பசுப்பாலுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ள நிலையில் நெஸ்லே நிறுவனம் பால் சபை ஊடாக தினமும் பாலைக் கொள்வனவு செய்து வருகிறது.

இந்நிலையில் தம் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக உள்ள கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை இன்மையால் தாம் கால்நடை வளர்ப்பதை கைவிட வேண்டிய அவலநிலை உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பான மகஜர்களும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பியுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். (5-4-84)

# வீதியோரங்களில் கால்நடைகளை கட்டுவதை தவிர்த்துக்கொள்ளவும்

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் பிரதான வீதிகளின் அருகே கால்நடைகளை கட்டி மேய்ப்பதால் பல இடங்களில் விபத்து ஏற்பட்டு வருவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

சென்ற வாரம் மட்டும் கால்நடைகளுடன் மோதி ஏற்பட்ட விபத்துக்களில் காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தொழில் முடிந்து வீடுகளுக்கு செல்லும் வேளைகளில் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அண்மைக்காலத்தில் பலர் இவ்வாறு விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே கால்நடை உரிமையாளர்கள் வீதியோரங்களில் கால்நடைகளை கட்டுவதனை தவிர்த்து விபத்துக்களை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (5-4-84)

# பயிற்சிப் பட்டறையும் சான்றிதழ் வழங்கலும்



(நெளுக்குளம்)

வடக்கு மாகாண ரீதியில் வவுனியாவில் குத்துச்சண்டைப் பயிற்சி பட்டறையும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண பிரேஞ் சவாட் கிக் பொக்சிங் அமைப்பின் தலைவர் எம்.எஸ்.நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை பிரேஞ் சவாட் கிக் பொக்சிங் அமைப்பின் தலைவர் சி.பூ. பிரசாத் விக்கிரமசிங்க வளவாளராக கலந்து கொண்டு வடக்கு மாகாண வீர, வீராங்கனைகளுக்கு பயிற்சிகளை வழங்கினார்.

அத்துடன் அமைப்பின் பிரதித்தலைவர் காசன் ஜெயசேகர, செயலாளர் பாரீஸ் மௌலானா, பொருளாளர் சரீட் சோனல் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 200 வீர,வீராங்கனைகளுக்கு கிக் பொக்சிங் பயிற்சி பட்டறையானது கடந்த 13, 14ஆம் திகதிகளில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக வவுனியா நகர சபையின் பிரதித் தலைவர் கெ.குமாரசாமி, வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எஸ்.மயூரன், வவுனியா மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கெ. கமலன் மற்றும் காப்புறுதி நிறுவனத்தின் முகாமையாளர் ஆர்.சுவிதர் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்ட வீரர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர். (5-4-299)



அமரர் சிவபாதம் சாரங்கனின் 31 ஆம் நாள் நினைவாக அவரது நண்பர்களால் தமிழ் விருட்சம் ஊடாக பம்பை மடு செக்கடிப்புலவு செல்வாநகர் மக்களின் குடிநீர் தேவைக்காக குழாய்க்கிணறு அமைக்க பெற்று நேற்று முன்தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டது. (படம்:-சதீஸ்)

## இராசிபலன்

17.02.2021
மாசி 05, புதன்கிழமை
சஷ்டி முழுவதும்
அச்சுவினி பின்னிரவு 12.06 மணிவரை
சுபநேரம் 5.03-6.33 மணிவரை
இராகுகாலம் 12.33-2.03 மணிவரை
சந்திராஷ்டமம் உத்தரம், அத்தம்
சஷ்டி விரதம், விபூதிப் புதன்


மேஷம்

உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கனிசமான ஆதாயம் கிடைக்கலாம், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.


ரிஷபம்

விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் கூடும்.


மிதுனம்

எண்ணிய காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


கடகம்

வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.


சிம்மம்

சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், முன்னேற்றமும் அலைச்சலும் அகலும், வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.


கன்னி

குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.


துலாம்

குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


விருச்சிகம்

திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, மனக்குழப்பம் அகலும், கௌரவமான நாள்.


தனுசு

கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.


மகரம்

செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிரயாண சுகமுண்டு.


கும்பம்

முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், வழிபாடு மகத்துவம் தரும்.


மீனம்

சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொழிலை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், உற்சாக மான நாள்.

வாய் வீரம் பேசுபவன் கை வீரம் காட்ட மாட்டான்

# அரிசி விலை மேலும் அதிகரிக்கும்

## அரிசி உற்பத்தியாளர் சங்கம் எச்சரிக்கை


(கொழும்பு)

**பண்டிகைக்காலம் அண்மிக்கின்ற போது அரிசியின் விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என அகில இலங்கை சிறு மற்றும் மத்திய அளவிலான அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

பெரும் போகத்தில் நெல்லைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், பாரிய அளவிலான ஆலை உரிமையாளர்களும், நெல்லை கொள்வனவு செய்பவர்களும் கடந்த ஆண்டுகளைப் போல நெல்லை பதுக்கி வைக்கும் அபாயம் உள்ளதாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அகில இலங்கை சிறு மற்றும் மத்திய அளவிலான அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பீ.கே. ரஞ்சித் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

# பேரணியில் பங்கேற்ற மனோவிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார்



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் சமூகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான நீதிக்கான பேரணியில் கலந்துகொண்டு, சட்டத்தை மீறியுள்ள குற்றச்சாட்டின் பேரில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனிடம் பொலிஸார் நேற்று வாக்குமூலம் பெற்றனர். இது தொடர்பில் மனோ கணேசன் தனது முகநூலில் பதிவிட்டுள்ள பதிவு வருமாறு,

மாங்குளம் பொலிஸ், முல்லைத்தீவு நீதிமன்றத்தில் AR154/21 என்ற இலக்கத்தின் கீழ் பெற்றதாகக் கூறப்படும் தடையுத்தரவை நான் பெப்ரவரி 6ஆம் திகதி மீறினேன் என்பதே குற்றச்சாட்டு.

எழுத்து மூலமாகப் பொலிஸுக்கு நான் கொடுத்த வாக்குமூலம் ஊடகங்களுக்கு விரைவில் வெளியிடப்படும் என அவர் பதிவிட்டுள்ளார். (நி-4)

# சடலங்களை தகனம் செய்வதில் எந்த மாற்றமும் இல்லை-கம்மன்பில

(கொழும்பு)

கோவிட் மரணங்களை தகனம் செய்யும் தீர்மானத்தில் மாற்றம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவால் மரணிப்போரின் சடலங்களை தகனம் செய்வதற்கு முஸ் லிம் சமூகமும், சர்வதேச ரீதியாகவும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டிருந்த நிலையில்,

தற்போது, கொரோனாவால் மரணிப்போரின் சடலங்களை தகனம் செய்யும் தீர்மானத்தில் மாற்றமில்லையென அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை கூட்டத்தில் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்படி தீர்மானத்தை அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (நி-4)

# ஒன்லைன் மூலமான கட்டண அட்டை அறிமுகம்

(கொழும்பு)

இலங்கையின் பொதுப் போக்குவரத்து சேவைக்காக ஒன்லைன் முன் கட்டண போக்குவரத்து அட்டை அறிமுகப் படுத்தப் படுவதற்கும் கட்டணம் வசூலிக்க மின்னணு முறையை அமுல் படுத்துவதற்கும் அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்துள்ளது.

இது தொடர்பான திட்டத்தைப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்திருந்தார்.

இலங்கையில் பொதுப் போக்குவரத்துத்துறை தற்போது பண அடிப்படையிலான முறையை நம்பியுள்ளது. பொது பேருந்துகள் மற்றும் ரயில்களில் பயன்படுத்தக்கூடிய ஒன்லைன் முன் கட்டண போக்குவரத்து அட்டையை அறிமுகப் படுத்துவதற்கான திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு, இந்தத் துறைக்கு தொடர்புடைய அனைத்து நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்புக் குழுவை நியமிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. (நி-4)

# முழு தலைக்கவசம் அணிபவர்களுக்கு சலுகை




(கொழும்பு)

முழு தலைக்கவசம் (full face helmet) அணிந்து மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளதாக நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (நி-4)



# சிறுவர் அரங்கம்

## சிங்கத்தின் பங்கு



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று அட்டகாசம் செய்து வந்தது.

இதனால், எல்லா மிருகங்களும் கூடிப் பேசின.

பிறகு, சிங்கத்துடன் சேர்ந்து அமைதியாக வாழலாம் என்று முடிவு செய்தன.

எல்லா மிருகங்களும் தங்களுக்கு கிடைக்கும் உணவை சரிசமமாக பிரித்துக் கொள்ள வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அது போலவே நடந்து கொண்டிருந்தது.

இப்படியிருக்கையில் ஒரு நாள், சிங்கம் ஒரு பெரிய மானை வேட்டையாடி வீழ்த்தியது. உடனே எல்லா மிருகங்களும் கூடிவிட்டன.

சிங்கம் மானின் இறைச்சியை நான்கு பங்காகப் பிரித்தது.

இருப்பதிலேயே சிறந்த பாகத்தை சிங்கம் தனக்கென எடுத்துக் கொண்டது.

"இது எனக்கு, ஏனென்றால் நான்தான் சிங்கம்" என்று சொன்னது.

பிறகு, அடுத்த பகுதியையும் தனக்கென எடுத்துக் கொண்டது. "இதுவும் எனக்குத் தான் உரிமையாகிறது.

காரணம் நான்தான் கூட்டத்திலேயே வலிமையானவன்" என்றது. மூன்றாவது பங்கை எடுத்து தன் பக்கம் வைத்துக்கொண்டு, "இருப்பதிலேயே வீரமானவனான எனக்கு இது" என்றது.


பிறகு நான்காவது பங்கை மற்ற மிருகங்களின் முன்பாக வைத்து விட்டு, "யாருக்காவது தைரியம் இருந்தால் இதைத் தொடுங்கள் பார்க்கலாம்" என்றது. பிற மிருகங்கள் ஒன்றும் செய்ய முடியாமல் விழித்தன.

**நீதி: வலுத்தவன் சொல்வதே சட்டம்**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சிரஞ்சீவி அலெக்சாண்டர்

119



அலெக்சாண்டரைத் துண்டு துண்டாக வெட்டிப் போடுவதே அவர்களது நோக்கம்.

சிலிர்த்தெழுந்தார்கள் மாசிடோனிய வீரர்கள். அவர்களுக்கும் மாலி வீரர்களுக்குமிடையே மோதல் கடுமையாக இருந்தது.

மெல்லக் கண்விழித்தார் அலெக்சாண்டர். அது மயக்கம். ஆயுதங்களின் மோதல் சத்தம் உசுப்பவே உத்வேகத்துடன் எழுந்து நின்றார். தம் உடலில் தைத்த அம்புகளைப் பிடுங்கி எறிந்தார்.

வெறி, கோபம், பெரும் சீற்றத்துடன் மாலி வீரர்களுக்கு மரணம் வழங்க ஆரம்பித்தார் அலெக்சாண்டர்.

சிறிது நேரத்தில் அந்தக் களத்துக்கு ஏராளமாக மாசிடோனிய வீரர்கள் வந்துவிட்டனர். ஒரு குழுவினர் அலெக்சாண்டரைப் பத்திரமாகக் கொண்டு சென்று சிகிச்சை கொடுக்கத் தொடங்கினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அலெக்சாண்டரின் உடல் நிலை முன்னேறத் தொடங்கியது.

அலெக்சாண்டருக்கு ஒருபுறம் தீவிரமாகச் சிகிச்சை நடந்து கொண்டிருந்தது. ஆனால் படைவீரர்களுக்கு மத்தியில் அவருடைய உடல் நிலையைப்பற்றி தவறான வதந்திகள் உலாவின.

ஒருநாள் படை வீரர்கள் மொத்தமாக அலெக்சாண்டர் இருக்கும் இடத்திற்கு வந்தார்கள்.

அலெக்சாண்டருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அலெக்சாண்டர் யுத்த உடைகளை அணிந்துகொண்டு வெளியே வந்து காட்சி கொடுத்தார். புன்னகை செய்தார். அதன் பிறகே வீரர்கள் கலைந்து சென்றனர்.


உடல்நிலை முன்னேறினாலும் நடக்கவோ குதிரையில் அல்லது வாகனத்தில் அமர்ந்தோ செல்ல முடியாத நிலை. டோலியில் வைத்தே தூக்கிச் சென்றனர் வீரர்கள்.

(தொடரும்)

# போராடினால் 20 ஆண்டுகள் சிறை மியன்மார் இராணுவம் எச்சரிக்கை

(மியன்மார்)

**மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**



மியன்மாரில் கடந்த நவம்பரில் நடந்த தேர்தலில் ஆங் சான் சூகியின் தேசிய ஜனநாயகக் கட்சி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. ஆனால், தேர்தலில் முறைகேடுகள் நடந்திருப்பதாகக் கூறி, புதிய அரசை ஏற்க இராணுவம் மறுத்தது.

இது தொடர்பாக மியன்மார் அரசுக்கும் இராணுவத்துக்கும் இடையே மோதல் நீடித்து வந்த நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன் ஆங் சான் சூகி தலைமையிலான கட்சியின் ஆட்சியைக் கவிழ்த்து இராணுவம் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றியது.

மேலும் ஆங் சான் சூகி மியன்மாரின் ஜனாதிபதி யுவின் மியிண்ட் மற்றும் முக்கிய தலைவர்களையும் வீட்டுக் காவலில் இராணுவம் வைத்தது. இதனைத் தொடர்ந்து இராணுவ ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேபிடாவ், யனக்கூன் ஆகிய பகுதிகளில் போராட்டங்கள் வலுத்து வருகின்றன. இதன் காரணமாக இணையச் சேவை நாட்டின் பல இடங்களில் முடக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இராணுவத்துக்கு எதிராகப் போராடுபவர்களுக்கு சுமார் 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும் என்று மியன்மார் இராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும், பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் அளிக்கும் வகையில் நடந்துகொண்டால் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை மியன்மார் இராணுவம் தனது அதிகாரபூர்வ இணையப் பக்கத்தில் வெளியிட்டுள்ளது. (நி-4)

# பிரதமர் மாளிகையில் 10 ஆண்டுகள் சேவகம் செய்யும் பூனை



(லண்டன்)

இங்கிலாந்து பிரதமர் வீட்டுக்கு எலித்தொல்லையை குறைக்க கொண்டுவரப்பட்ட பூனை 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

இங்கிலாந்து பிரதமராக டேவிட் கமரூன் இருந்த போது அவரது அரசு வீட்டில் எலித்தொல்லை அதிகமாக இருந்தது. இதற்காக அவர் வீட்டில் ஒரு பூனை வளர்க்க விரும்பினார்.

ஒரு நாள் அவரது வீட்டின் அருகே மாநகராட்சி ஊழியர்கள் ஒரு வாகனத்தில் தெருவில் சுற்றித் திரிந்த பூனைகளை பிடித்து செல்வதை கண்டார். அதில் இருந்து ஒரு பூனையை தன் வீட்டில் வளர்ப்பதற்கு கேட்டார்.

மாநகராட்சி ஊழியர்கள் வழங்கிய பூனை, அப்போதைய பிரதமர் டேவிட் கமரூனின் அரசு வீட்டில் வளர்ந்து வந்தது. அங்கு தொல்லை கொடுத்த எலிகளையும் பிடித்தது.

டேவிட் கமரூனுக்கு பிறகு தெரசாமேயும், இப்போது போரிஸ் ஜான்சனும் பிரதமராக உள்ளார். ஆனால் பிரதமரின் வீட்டில் இருந்த பூனை மட்டும் மாறவேயில்லை. அந்த பூனை பிரதமர் வீட்டுக்கு சென்று நேற்று முன் தினத்துடன் 10 ஆண்டுகள் முடிந்தது. இதனை பிரதமர் வீட்டு பணியாளர்கள் தெரிவித்தனர். (நி-4)

# படகு கவிழ்ந்ததில் 60 பேர் உயிரிழப்பு

## 300 பேர் உயிருடன் மீட்பு

(கொங்கோ)

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கொங்கோவில் மை- டோம்பே மாகாணத்தில் சுமார் 700 பயணிகளுடன் ஆற்றில் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் படகில் பயணம் செய்தவர்களில் 60 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 300 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

காணாமல் போன ஏனைய பயணிகளை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

படகு கின்ஷாசாவிலிருந்து புறப்பட்டு ஈக்குவடோருக்கு சென்று கொண்டிருந்த நிலையிலேயே விபத்து ஏற்பட்டுள்ளது. படகில் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்றதே விபத்துக்கு காரணம் என்று முதல் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

# ஐ.நா.பொதுச் செயலாளர் பதவிக்கு இந்திய வம்சாவளிப் பெண் போட்டியிட விருப்பம்

(ஜெனிவா)

ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பதவிக்கு 34 வயதான இந்திய வம்சாவளிப் பெண் அரோரா அகாங்க்ஷா போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளார்.

ஐ.நா. சபையின் 9 ஆவது பொதுச் செயலாளராக அந்தோனியோ குட்டேரஸ் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2017 ஜனவரி 1 ஆம் திகதி பொறுப்பேற்றார். அவரின் பதவிக் காலம் 2021 டிசெம்பர் மாத இறுதியில் முடிவடைகிறது. எனினும் அடுத்த 5 ஆண்டுகளுக்கு அவரே நீடிக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் 10 ஆவது பொதுச் செயலாளர் பதவிக் காலம் ஜனவரி 2022 ஆம் ஆண்டு தொடங்க உள்ள நிலையில்




ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக்கு அரோரா அகாங்க்ஷா போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின் தணிக்கை ஒருங் கிணைப் பாளராகப் பணியாற்றி வருபவர் அரோரா அகாங்க்ஷா. 34 வயதான இந்திய வம்சாவளிப் பெண்ணான இவர் உலகின் உயர்ந்த தூதர் பதவியான ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக இரண்டரை நிமிடக் காணொளியையும் வெளியிட்டுள்ளார். அதில், 'கடந்த 75 ஆண்டுகளாக உலகத்துக்கு அளித்த அகதிகள் பாதுகாப்பு உள்ளிட்ட வாக்குறுதியை ஐ.நா. நிறைவேற்றவில்லை' என்று அரோரா விமர்சித்துள்ளார்.

75 ஆண்டு கால வரலாற்றில் இதுவரை ஐக்கிய நாடுகள் சபையின் தலைவராக ஒரு பெண் பொறுப்பேற்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மது ஆலை எகிப்தில் கண்டுபிடிப்பு



(கெய்ரோ)

எகிப்தில் ஆய்வுப் பணியின் போது அபிடோஸ் நகரில் 5,000 ஆண்டுகளுக்கு முன்னர் இயங்கிவந்த மது ஆலை கண்டுபிடிக்கப்பட்டு ள்ளது.

எகிப்து நாட்டின் பழைமை வாய்ந்த நகரங்களில் ஒன்று அபிடோஸ். இங்கு மிகப் பெரிய கல்லறைகள் மற்றும் கோவில்கள் உள்ளன. இந்த நகரில் எகிப்து மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த தொல்லியல் நிபுணர்கள் ஆய்வு பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த ஆய்வுப் பணியின் போது அபிடோஸ் நகரில் 5,000 ஆண்டுகளுக்கு முன்னர் இயங்கி வந்த மது ஆலையைக் கண்டுபிடித்தனர்.

இரு வரிசைகளில் 40 பானைகள் பொருத்தப்பட்டு தானியங்களையும் நீரையும் கலந்து "பீர்" மதுபானம் தயாரிக்கும் வகையில் அந்த ஆலை அமைக்கப்பட்டுள்ளது. எகிப்து மன்னர்களின் இறுதிச் சடங்கின் போது அரச சடங்குகளை வழங்குவதற்காக குறிப்பாக இந்த இடத்தில் இந்த மது ஆலை கட்டப்பட்டிருக்கலாம். இங்கு ஒரே நேரத்தில் சுமார் 22 ஆயிரத்து 400 லீற்றர் வரை பீர் உற்பத்தி செய்யப்பட்டு இருக்கும் என்று கருதப்படுகிறது என்றார்.

இதுவே உலகின் மிகவும் பழைமையான உயர் உற்பத்தி மதுபான ஆலை என்று நம்பப்படுவதாகவும் தெரிவித்தார். (நி-4)

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# கண்டங்கத்தரியும், வட்டுக்கத்தரியும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**கண்டங்கத்தரி**
**Botanical Name:**
**Solanum xanthoearpum**
**Family:**
**Solanaceae**

**வட்டுக்கத்தரி**
**Botanical Name:**
**Solanum Surattense**
**Family:**
**Solanaceae**

கண்டங்கத்தரியானது ஓராண்டு வளரக்கூடிய இக் கொடி. சுமார் 100 செ.மீற்றர் தூரம் வரைக்கும் நன்கு அடர்த்தியாக தரையோடு ஒட்டிப் படரும். இலைகள் நெருக்கமானவையாக இருக்கின்றன. இலையின் இருபுறங்களிலும் கொடி, காம்பு எல்லாவற்றிலும் சுமார் ஒரு சென்ரி மீற்றர் நீளமுள்ள பிரகாசமான மஞ்சள் நிற முட்கள் ஏராளமாக நிறைந்திருப்பதைக் காணலாம். பூக்கள் ஐந்து பிரிவாக்த் தெரியும. ஒரே இதழுடைய ஊதா நிறமானவை. வட்டவடிவக் காயின் சாம்பல் நிறத்தோலில் பல பச்சை நிறக்கோடுகள் காணப்படும். விதைகள் அதிகமுடைய மஞ்சள் நிறப்பழங்கள். வருடம் முழுவதும் பூக்கக் கூடியது.

கண்டங்கத்தரியின் இலை, காய், பழம், வேர், வித்துக்கள் அனைத்தும் மருத்துவப் பண்புகள் நிறைந்தவை.

வட்டுக்கத்தரியானது பல்லாண்டு வாழக்கூடிய 30-90 செ.மீ உயரமான பல கிளைகளைக் கொண்ட செடியாகும். தனியிலை, ஒன்றுவிட்ட இலையமைப்பைக் கொண்டது. இலையில் இருபுறங்களும் சுனைபோன்ற அமைப்பை இலையில் முன் பின் பக்கங்களில் நடுநரம்புகளில் நேராக முட்கள் போன்ற அமைப்புக் காணப்படும். வட்டவடிவ பழங்கள் மஞ்சள் நிறமாக இருக்கும். காய்களாக இருக்கும் போதுபிரகாசமானது. வெள்ளை நிறத்தில் பச்சைநிற வரிகளைக் கொண்டதாகவும் இருக்கும். இச செடியிலும் வருடம் முழுவதும் பூக்களைக் காணலாம்.

வட்டுக்கத்தரியின் வேர்கள் பல்வேறு வகையான சுவாசாசய நோய்களில் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் கழிச்சல், மூட்டுவியாதிகளிலும் இதன் வேர் பயன்படுத்தப்படுகின்றது. வட்டுக்கத்தரி செடியின் இளம் பராயத்தின் இலைகளையும், தண்டுகளையும் பயன்படுத்தி கஞ்சி தயாரித்து நோய்வாய்ப்பட்டு நோயிலிருந்து மீண்டவர்கட்கு தேகபலத்தை ஏற்படுத்துவதற்காக பயன்படுத்தலாம்.

இதன் முதிர்ச்சியடைந்த பழங்களை வட்டுக்கத்தரி குழம்பு, வற்றல் போன்ற காய், கறியாகவும் பயன்படுத்தலாம்.

கண்டங்கத்தரி வேர், வட்டுக்கத்தரி வேர் ஆகிய இரண்டு வேர்களும் தசமூலம் எனும் கூட்டுச்சரக்கில் பயன்படுத்தப்படுகின்றது. தசமூலச்சூரணம், தசமூலக்குடிநீர், தசமூல அரிஷ்டம் போன்ற மருந்துகளில் இவ்விரண்டு வேர்களும் பயன்படுத்தப்படுகின்றது. தேகபலம், நரம்பு மண்டலத்தை பலப்படுத்தக் கூடியதுமாகும்.



கண்டங்கத்தரி

கண்டங்கத்தரியானது சுவாச நோய்களுக்கு சிறந்த மூலிகையாகும். காய், பழங்களை சமைத்தும் வற்றல் போட்டும் சாப்பிடலாம்.

கண்டங்கத்தரி இலைகளைச் சேகரித்து கழுவி முட்களை நீக்கிவிட்டு அம்மியில் வைத்து நைத்து சாறு எடுத்து ஒரு தேக்கரண்டி சாற்றை சுத்தமான துணியில் வடிகட்டி அதேயளவு தேன் சேர்த்து காலை, மாலை 3 நாட்கள உட்கொள்ள இருமல் தீரும். அத்துடன் சிறுநீர் நன்கு கழியும்.

கால்களில் ஏற்படும் பித்த வெடிப்பிற்கு பத்து கண்டங்கத்தரி இலைகளை எடுத்து அதை ஒரு சட்டியில் போட்டு அரை டம்ளர் (100 மில்லி) அளவு தேங்காய் எண்ணெயை ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சினால் இலை வெந்து கருகும். அந்தச் சமயம் இறக்கி எண்ணெயை வடிகட்டி ஒரு சீசாவில் விட்டு வைத்துக் கொள்ளவும். இரவு படுக்க முன்பு கால்களிலுள்ள வெடிப்புகளின் மேல் தடவி வந்தால் வெடிப்புகள் ஆறி மறைய ஆரம்பிக்கும் ஆறும் வரை மருந்தைப் பூசலாம்.

இதன் முழுச்செடியையும் நிழலில் உலர்த்தி இடித்து அரித்து 1-2 கிராம் தேனுடன் காலை, மாலை 7 நாட்கள் உட் கொள்ள இருமல், ஆஸ்மா, கசநோய் போன்றன குறைய ஆரம்பிக்கும்.

கண்டங்கத்தரி முழுச்செடியையும் நன்கு கழுவி வெட்டி தசமூலச் செடிக்கும் 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 30-60 மில்லி காலை, மாலை கொடுக்க நாட்பட்ட இருமல் தணியும்.

கண்டங்கத்தரியின் பழங்களை குழைய வேகவைத்து கடைந்து வடிகட்டி எடுத்த அளவு ஒரு பங்கிற்கு அதேயளவு பசுநெய் சேர்த்து காய்ச்சி கடுகு திரளும்பருவத்தில்வடிகட்டிவெண்குட்டத்தின் மீது பூசிவர வெள்ளைப் புள்ளிகள் படிப்படியாக மறையும். கண்டங்கத்தரி விதைகளை எரித்து அதனின்று வரும் புகையைப் பிடிக்க பல்வலி குணமாகும்.

**கண்டங்கத்தரி வற்றல்**

மோர்-அரைலீற்றர், கண்டங்கத்தரி-ஒருகிலோ, மஞ்சள் பொடி - 10 கிராம், மிளகு - 20 கிராம், உப்பு - தேவையான அளவு. மோரில் உப்பு போட்டு, மஞ்சள் பொடி போட்டு மிளகைத் தூள் செய்து போட்டு கண்டங்கத்தரி காய்களை ஒரு பக்கத்தில் லேசாகக் கீறி மோரில் போட்டு இரண்டு நாட்கள் ஊற விடவும்.



வட்டுக்கத்தரி

மறுநாள் எடுத்து காய வைத்து வறுத்து உணவுடன் தொட்டுக் கொண்டு சாப்பிடவும். இதனால் கசம், இருமல், பீனிசம், சளிக்காய்ச்சல் ஆகிய நோய்களுக்கு சிறந்ததாக அமையும்.

கண்டங்கத்தரி இலைச்சாற்றில் அல்லது குடிநீரிட்டு நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி பூசி வர தலைவலி நீங்கும்.

கண்டங்கத்தரி இலைச் சாற்றில் ஆழிநெய் சேர்த்துக் காய்ச்சி பித்த வெடிப்புகளுக்குப் பூச அவை இலகுவில் ஆறும்.

கண்டங்கத்தரி வேர், சிறுதேக்கு வேர், கோரைக்கிழங்கு, சுக்கு இவற்றை ஒரேயளவாக எடுத்து 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 30-60 மில்லி காலை, மாலை குடிக்க உடல் வலியுடன் கூடிய காய்ச்சல் நீங்கும்.

கண்டங்கத்தரி பழங்களை சேகரித்து நிழலில் உலர்த்தி அப்படியே வைத்திருக்கலாம் அல்லது பொடித்து தூளாக வைத்திருக்கலாம். இதனால உலர்ந்த பழங்களை அப்படியே அல்லது பொடியை நெருப்புத் தணலில் போட புகை வெளியேறும். இப் புகையை சுவாசிக்க இரைப்பு அல்லது ஆஸ்மர நோய் குணமாகும்.

**கண்டங்கத்தரி சூப்**

கண்டங்கத்தரி இலைகள் அல்லது முழுச்செடி, சின்ன வெங்காயம், சீரகம், பூண்டு, மிளகு, இந்துப்பு. ஒரு வாணலியில் சிறிது நல்லெண்ணெய் விட்டுவெங்காயம், சீரகம், உள்ளி போட்டுவெந்ததும்வெட்டிய கண்டங்கத்தரி இலைகள், தண்டுகள் போட்டு மிளகுத்தூள் தூவி தேவையான அளவு இந்துப்பை பொடித்து தூள் செய்து போட்டு தேவையான அளவு நீர்விட்டு மூடி கொதிப்பித்து இறக்கி இளஞ் சூட்டுடன் சூப்பாக பருகலாம். குழந்தைகட்கு 2-3 துளிகள் வரை கொடுக்கலாம். சுவாசாசயத்தையும் அக உறுப்புக்களையும் பலப்படுத்தக் கூடியது.

**கண்டங்கத்தரிக் குழம்பு**

கண்டங்கத்தரி காய்/பழம்-50, இரண்டாக பிளந்து விதைகளை நீக்கவும். தக்காளி - 5 பழங்கள் (மிக்ஸியில் அடித்து வைத்துக் கொள்ளவும்) சின்ன வெங்காயம், கடுகு, உழுத்தம் பருப்பு, மிளகாய்த்தூள், மஞ்சள் தூள், உப்பு தேவையான அளவு, நல்லெண்ணெய் -2 மேசைக்கரண்டி. வாணலியில் நல்லெண்ணெய் விட்டு சூடானதும் கடுகு, உழுத்தம் பருப்பு, அரிந்த சின்ன வெங்காயம் ஆகியவற்றை போட்டு வதக்கி வதங்கியதும் கண்டங்கத்தரி வெட்டிய காய்கள் அல்லது கனிகளை சேர்த்து வேக விட்டு பின்பு அரைத்து தக்காளியையும் போட்டு தேவையான அளவு மிளகாய்த்தூள், உப்பு சேர்த்து வேகவைத்து பச்சை வாடைபோனதும் சிறிதளவு நீர்விட்டு குழம்பு பக்குவத்தில் கொதிப்பித்து இறக்கவும். சாதத்துடன் சேர்த்துப் சாப்பிடலாம் அடிக்கடி சளித் தொல்லை இருப்பவர்களும், கச மற்றும் குக்கல் நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் இதனை பயன்படுத்தி வர நல்ல பலனைப் பெறமுடியும்.

எமது பிரதேசத்தில் பரம்பிக் காணப்படும் மருத்துவப் பண்புகள் நிறைந்த மூலிகளான கண்டங்கத்தரி, வட்டுக்கத்தரி இரண்டும் மூலி இனங்களாக மட்டுமன்றி மரக்கறி வகையாகவும் பயன்படுத்தக் கூடியதாக இருப்பது இன்னும் சிறப்பம்சமாகும்.

கண்டங்கத்தரி காய்களை அல்லது வட்டுக்கத்தரி காய்களை கத்தரிக்காய் காரக் குழம்புடன் சேர்த்தும் வைக்கலாம். தேகபலத்தை அதிகரிக்கும். சளித்தொல்லை வராமல் தடுப்பதற்காகவும் கண்டங்கத்தரி வற்றல் குழம்பாக தயார் படுத்தியும் எடுக்கலாம்.

கண்டங்கத்தரிவேர் இலை, ஆடாதோடை இலை, தூதுவளை இலை, துளசி இலை, மிளகு ஒவ்வொன்றும் ஒரே அளவாக எடுத்து நன்கு கழுவி இலைகளை குறுகலாக அரிந்து மிளகையும் தட்டிப் போட்டு மண்சட்டியில் குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை சாப்பாட்டின் முன்பு 8 மில்லி தேன்கலந்து அருந்த நாட்பட்ட இருமல், ஆஸ்மா, காச நோய் போன்றன நீங் கும்.

கண்டங்கத்தரி கிடைக் காத சமயத்தில் அதற்கு பதிலாக வட்டுக்கத்தரியையும் பயன்படுத்தலாம். கண்டங்கத்தரியை முள்ளிக்காய் எனவும் அழைப்பர்.

# முஸ்லிம் அடிப்படைவாதிகளின் அமைச்சராக அல்ல நீதியமைச்சராக பதிலளிக்க வேண்டும்

## அலிசப்ரியை எச்சரிக்கும் தேரர்



(கொழும்பு)

பெரும்பான்மையின மக்களால் தோற்றுவிக்கப்பட்ட அரசாங்கத்தின் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நீதியமைச்சர் அலிசப்ரி செயற்பட வேண்டும் என்றும் முஸ்லிம் அடிப்படைவாதத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் கருத்து தெரிவிப்பதை அவர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

முஸ்லிம் விவாக சட்டத்தை மேல் நாட்டு சட்டம், தேச வழமை சட்டம் ஆகிய பாரம்பரிய சட்டங்களுடன் ஒப்பிட முடியாது.

பௌத்த சாசனத்தை பாதுகாக்கவும், பௌத்த உரிமையைப் பாதுகாக்கவும் இயற்றப்பட்ட சட்டங்களை நீக்க பௌத்த மக்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள்.

முஸ்லிம் சட்டத்தினால் மனித உரிமை மீறப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்த முடியும். இவ்விடயம் குறித்து நீதியமைச்சர் எம்முடன் நேரடியான பகிரங்க விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம் விவாக சட்டம் குறித்து அண்மையில் பாராளுமன்றில் உரையாற்றினேன். இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் நோக்கில் முஸ்லிம் விவாகச் சட்டம் குறித்து கருத்துரைக்கவில்லை.

மனித உரிமை கோட்பாட்டை முழுமையாக செயற்படுத்தும் போது மத காரணிகளுக்கு முன்னுரிமை வழங்கக் கூடாது. நான் குறிப்பிட்ட கருத்தை பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே ஆகியோர் ஏற்றுக் கொண்டார்கள்.

நான் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் அலி சப்ரி நீதியமைச்சராக இருந்து பதிலளிப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் முஸ்லிம் அடிப்படைவாதிகளின் அமைச்சராக இருந்து பதிலளித்துள்ளமை கவலைக்குரியது.

முஸ்லிம் விவாக சட்டம் காதி நீதிமன்றத்தினால் செயற்படுத்தப்படுகிறது. இது ஒரு நாடு- ஒரு சட்டம் என்ற கொள்கைக்கு முற்றிலும் முரணானது.



மகாசங்கத்தினருக்கு பிரத்தியேகமாக நீதிமன்றம் ஏதும் உருவாக்கப்படவில்லை என்பதை நீதியமைச்சர் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே முஸ்லிம் விவாக சட்டத்தை பௌத்த சாசனத்தையும், பௌத்த உரிமைகளையும் பாதுகாக்க உருவாக்கிய சட்டங்களுடன் ஒப்பிடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

முஸ்லிம் அமைச்சர் என்ற நிலைப்பாட்டில் இருந்து விலகி பொறுப்பான நீதியமைச்சர் என்ற அடிப்படையில் நீதியமைச்சர் அலிசப்ரி செயற்பட வேண்டும். இவ்விடயம் குறித்து பகிரங்க விவாதத்திற்கு அழைக்கிறேன். அனைத்து காரணிகளையும் ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியும்.

முஸ்லிம் விவாக சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். இதில் ஏனைய சட்டங்களை சார்பாக்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் கர்தினாலின் சந்தேகம் அவசியமற்றது

## பேராசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை குறித்து கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சந்தேகம் கொள்வது அவசியமற்றது. குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள். குற்றவாளியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை அரசியல் இலாபம் கருதி அரசாங்கம் பாதுகாக்காது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் இருந்தவர்களை பகிரங்கப்படுத்தி அவர்களை சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்துவோம் என்ற வாக்குறுதியை பொதுஜன பெரமுன கொள்கை பிரகடனமாக வெளியிட்டது. நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்பை திட்டமிட்டு பலவீனப்படுத்தியதை அடிப்படைவாதிகள் சாதகமாக பயன்படுத்தி தங்களின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை எந்தளவிற்கு உண்மைத்தன்மையுடன்காணப்பட்டது என்பது கேள்விக்குட்படுத்தப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாட்டை துரிதப்படுத்தினார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணை குறித்து தான் அதிருப்தியடைவதாக கர்தினால் மல்கம்



ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார். அதிருப்தியடைவது அவசியமற்றது என்றே குறிப்பிட வேண்டும். அரசாங்கத்தின் மீது வைத்த நம்பிக்கையை தொடர்ந்து பேணுவது அவசியமாகும்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் முழுமையாக செயற்படுத்தப்படும். அரசியல் நோக்கங்களை கருத்திற்கொண்டு எவரும் பாதுகாக்கப்படமாட்டார்கள் என பீரிஸ் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நிழற்படக் கருவி

ஒரு நண்பர் வந்தார். அவர் சமீபத்திலே ஜப்பானுக்கு போயிட்டு வந்தவர். நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து ஒரு படம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார். கமெரா இருக்கா? என்றேன். இதோ கையோடு கொண்டு வந்திருக்கின்றேன் என்றார். எடுப்பதற்கு இன்னொரு ஆள் வேண்டுமே என்றேன். வேண்டாம் இதுவே எடுத்துவிடும்.. என்றார். ஓட்டமற்றிக்கா என்றேன். அப்படித்தான் ஆனால் இது தானாக எடுக்காது. நான் கைதட்டினால் அது உடனே வேலை செய்ய ஆரம்பித்துவிடும் என்றார். அதேமாதிரித்தான்... அதை எதிரிலே வைத்துவிட்டு அவர் என்னுடன் வந்து நின்று கொண்டு கையைத் தட்டினார். அது உடனே படம்பிடிக்க ஆரம்பித்துவிட்டது. இப்படிப்பட்ட கமராவெல்லாம் இப்பொழுது வந்தாச்சு. கையைத் தட்டுவது மட்டுமில்லை. வேறு எந்த சத்தமாக இருந்தாலும் அது வேலை செய்யும். எங்கள் விருப்பபடி குறிப்பிட்ட ஒலிக்கு அது வேலை செய்வது மாதிரி அதை சரி செய்து வைத்துக் கொள்ளலாம்.

இன்றைக்கு இந்தளவுக்கு வந்திருக்கின்ற இந்த புகைப் படக்கலை எப்பொழுது ஆரம்பித்தது தெரியுமா? கமெரா என்பது ஒரு அற்புதமான கண்டு பிடிப்பு. 1839 இலே தான் இது நடந்தது. பிரான்ஸ் நாட்டில் லூயிட்கேர். இங்கிலாந்திலே வில்லியம் டால்பட். இவர்கள் இரண்டு பேரும் தான் புகைப்பட நெகட்டிவ் முறையை நாங்கள் கண்டு பிடித்திருக்கின்றோம் என்று அப்பொழுது சொன்னார்கள். கேர் உருவாக்கிய புகைப் படங்களை சாமுவேல் நேரில் வந்து பார்த்தார். இவர் தான் தந்தியைக் கண்டுபிடித்தவர். சிறந்த ஓவியர். இவர் இந்த புகைப்படத்தைப் பார்த்துவிட்டு மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனார். ரெம்ப்ராண்ட் ஓவியங்கள். மாதிரி மிகவும் தத்ரூபமாக இருக்கு என்றார்.

உடனே தன்னுடைய தாய் நாடான அமெரிக்காவுக்கு இதைப்பற்றி கடிதம் எழுதினார். அமெரிக்காவிலேயும் இந்தக் கலை வேகமாகப் பரவ ஆரம்பித்தது. 1840 இலே நியூயோர்க், பிலடெல்பியா ஆகிய நகரங்களிலே உலகின் முதலாவது புகைப்பட ஸ்டுடியோக்கள் ஆரம்பம். இருந்தாலும் 1888 வரைக்கும் கமெராவை ஒரு விநோதமான கருவியாகத்தான் எல்லோரும் நினைத்து இருந்தார்கள். அந்த ஆண்டிலே தான் ஜார்ஜ் ஈஸ்ட்மென் தனது கொடாக் கமெராவை உருவாக்கினார். அப்பொழுது அதன் விலை 25 டொலர் நீளமான மூன்று கால்கள் மேலே உட்கார்ந்திருந்த கமெரா இப்பொழுது கைக்கு வந்தாச்சு. இதற்குப் பிறகு தான் அமெச்சூர் புகைப்படக் கலை என்கின்ற புனிதமான இயக்கமே ஆரம்பமாகியது.

1889 இலே ஈஸ்ட்மென் இன்னொரு புதுமையைச் செய்தார். அதாவது செல்லுலாய்டிலே புகைப்பட புரோமைடு குழம்பைத் தடவி படம் எடுக்கின்ற முறையைக் கொண்டு வந்தார். படம் எடுத்து முடிந்ததும் கமெராவிலிருந்து அகற்றிவிடக் கூடிய பிலிம் சுருளையும் அவர் கண்டு பிடித்தார்.

அதற்கு முன்னாடியெல்லாம் படம் எடுத்ததும் அப்படியே கமெராவுடன் கொண்டு போய் ஸ்டூடியோவிலே கொடுத்துவிட வேண்டும். அங்கே தான் இருட்டு அறையில் கமெராவிலேயே இருந்து பிலிமை எடுப்பார்கள். அடுத்த 30 ஆண்டுகளிலே எவ்வளவோ புதிய மாற்றங்கள். முன்னாடியெல்லாம் கறுப்பு வெள்ளையிலேயே படம் எடுத்து கலர் தீட்டிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுதெல்லாம் கலர் படமே எடுக்கின்றோம். 1928 இலே கொடாக் கலர் பிலிம் வந்தது. அதற்கு அப்புறம் டெக்னிக் கலர் பிலிம் வந்தது.

இரண்டாவது உலக யுத்தம் நடந்த சமயத்திலே தான் புகைப்படக் கலை என்பது பத்திரிகைத் துறையின் ஒரு பிரிவாக மலர ஆரம்பித்தது. இப்பொழுதெல்லாம் புகைப்படக் கருவி என்பது சமுதாய நடவடிக்கைகளை பதிவு செய்கின்ற முக்கியமான கருவி. உள்ளதை உள்ளபடிக் காட்டுவது நிழற்படம். உள்ளதை உணர்ந்தபடிக் காட்டுவது ஓவியம்.

இந்தக் காலத்திலே உள்ளதை உணர்ந்தபடி காட்டுகின்ற நிழற்படங்கள் கூட உண்டு. ஒரு வீட்டிலே ஒரு சின்னப் பையன்- கமெராவாங்கிக் கொடு என்று தொந்தரவு செய்தான். வாங்கிக் கொடுத்தார்கள்.. நிறைய படங்களை எடுத்துத் தள்ளினான். அப்பாவிடம் கொண்டு வந்து காட்டினான். ஒரு படத்தை எடுத்துப் பார்த்தார் அப்பா.. உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. அம்மாவைக் கூப்பிட்டார்.

இங்கே வந்து உன் பையன் செய்திருக்கின்ற காரியத்தை பார் என்று கத்தினார். என்ன செய்திருக்கின்றான் என்று கேட்டுக் கொண்டு அந்த அம்மா வந்தார். என்னை எப்படிப் படம் எடுத்திருக்கின்றான் பாரு. பார்க்கிறதுக்குக் குரங்கு மாதிரி இருக்கு. இவ்வளவு மோசமாகவா எடுக்கிறது? என்றார். இவர்கள் நிதானமாக அவரிடம் கொஞ்சம் பொறுமையா உங்கள் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பாருங் கள்.. அது நிஜமாகவே குரங்கு தான்.. நீங்கள் இல்லை என் றார்கள்.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

07

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்களின் எண்ணிக்கை எல்லா மாவட்டத்திற்கும் ஒன்றே. ஆனால் அமெ்ரிக்க ஜனாதிபதித் தேர்தலில் அவ்வாறில்லை.

மாநிலத்திற்கு மாநிலம் ஜனாதிபதி வேட்பாளர்களின் எண்ணிக்கை மாறுபடும். இதன் விளக்கம் மேற்பந்திகளில் தரப்பட்டிருந்தது.

உதாரணமாக அலபாமா மாநிலத்தில் 3 ஜனாதிபதி வேட்பாளர்கள் மட்டும் போட்டியிட்டிருந்தார்கள். அவர்கள் வாக்குச்சீட்டில் பெயர் அச்சிடப்பட்ட வேட்பாளர்களாக போட்டியிட்டிருந்தார்கள்.

வாக்குச்சீட்டில் பெயர் அச்சிடப்படாத ஜனாதிபதி வேட்பாளர்கள் எவரும் போட்டியிடவில்லை. எனவே அம்மாநிலத்தின் ஜனாதிபதித் தேர்தல் வாக்குச் சீட்டின் நீளம் சிறிதாக இருந்திருக்கும்.

இதேநேரத்தில் கொலராடோ மாநிலத்தில் 24 ஜனாதிபதி வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தார்கள். இவ் 24 வேட்பாளர்களில் 21 வேட்பாளர்கள் வாக்குச்சீட்டில் பெயர் அச்சிடப்பட்ட வேட்பாளர்களாக போட்டியிட்டிருந்தார்கள். அத்தோடு 3 ஜனாதிபதி வேட்பாளர்கள் வாக்குச்சீட்டில் பெயர் அச்சிடப்படாத ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிட்டிருந்தார்கள்.

இவர்களுக்கு உரு-1 இல் காட்டியது போல் பெயரெழுதி வாக்களிக்க வாக்குச்சீட்டில் இடம் விடப்பட்டிருந்திருக்கும். எனவே அம்மாநிலத்தின் ஜனாதிபதித் தேர்தல் வாக்குச்சீட்டின் நீளம் பெரிதாக இருந்திருக்கும்.

வோஷிங்டன் மாநிலத்தில் தான் ஆகக்கூடுதலாக 43 ஜனாதிபதி வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தார்கள். இந்த 43 வேட்பாளர்களில் 6 வேட்பாளர்கள் வாக்குச்சீட்டில் பெயர் அச்சிடப்பட்ட வேட்பாளர்களாக போட்டியிட்டிருந்தார்கள்.

மிகுதி 37 ஜனாதிபதி வேட்பாளர்கள் வாக்குச்சீட்டில் பெயர் அச்சிடப்படாத ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிட்டிருந்தார்கள். வாக்குச்சீட்டில் பெயர் அச்சிடப்படாத ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஒரு **"write-in"** இடம் விட்டால் போதுமானது என்பது உரு-1 ஐப் பார்க்கும் போது விளங்கும்.

எனவே வோஷிங்டன் மாநிலத்தின் வாக்குச் சீட்டின் நீளம் அவ்வளவு பெரிதாக இருக்காது. அதாவது 7 ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான வாக்குச் சீட்டின் அளவை ஒத்ததாக இருக்கும்.

அமெரிக்க பாராளுமன்றத்தில் ட்ரம்ப் ஆதரவு கும்பல் வன்முறை




**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மாநிலத்திற்கு மாநிலம் ஜனாதிபதி வேட்பாளர்களின் எண்ணிக்கை மாறுபடும். அலபாமா மாநிலத்தில் 3 ஜனாதிபதி வேட்பாளர்கள் மட்டும் போட்டியிட்டிருந்தார்கள். வோஷிங்டன் மாநிலத்தில் தான் ஆகக்கூடுதலாக 43 ஜனாதிபுதி வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தார்கள்.**

### தெரிவான ஜனாதிபதி, ஜனாதிபதியாகப் பதவி ஏற்கும் முறை

அமெரிக்க ஜனாதிபதித் தெரிவு என்பது மிகவும் சிக்கலான முறையாகும். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவே பல நடபடிகளைக் கொண்டது. இது பற்றி முன்னர் ஒரு கட்டுரையில் பார்த்தோம்.

அவ்வாறு தெரிவு செய்யப்படும் வேட்பாளர்களில் ஒருவர் தேர்தலில் வெற்றி பெற்றதும் அவர் உடனடியாக ஜனாதிபதியாக முடியாது. அவர் அதன் பின் அதாவது (கடந்த தேர்தலில்) நவம்பர் 3 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற தினத்திலிருந்து இந்த ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி வரை தெரிவான ஜனாதிபதி **(President-Elect)** எனவே அழைக்கப்படுவார்.

அவருக்கு எந்தவொரு அதிகாரமும் இருக்காது. அதுவரை (ஜனவரி 20 வரை) முன்னைய ஜனாதிபதியே பதவியில் இருப்பார். இதுபற்றியும் அக்கட்டுரையில் பார்த்தோம். அவர் வெற்றிபெற்ற பின் ஜனவரி 20 ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்வதற்கு பல நடபடிகள் உள்ளன.

அந்நடபடிகள் பொதுவாக ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலின் போதும் மிகவும் சுமுகமாக நடைபெறுவது வழக்கம். புதிய ஜனாதிபதி, அமைச்சர்களை தேர்வு செய்ய, திட்டங்களைத் தயாரிக்க இந்த அவகாசம் (வெற்றி பெற்றதிலிருந்து ஜனாதிபதியாகும் வரை) உதவியாக இருக்கிறது. ஆனால் இம்முறை இது பல குழப்பங்களையும் அச்சங்களையும் ஏற்படுத்தி விட்டது. இதுபற்றியே இக்கட்டுரை நோக்குகிறது.

**நவம்பர் 3 தேர்தலில் வெற்றி பெற்ற பின் ஜனவரி 20 ஆம் திகதி ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்வதற்கு பல நடபடிகள் உள்ளன. அந் நடபடிகள் பொதுவாக ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலின் போதும் மிகவும் சுமுகமாக நடைபெறுவது வழக்கம். புதிய ஜனாதிபதி, அமைச்சர்களை தேர்வு செய்ய, திட்டங்களைத் தயாரிக்க இந்தக் காலம் (வெற்றி பெற்றதிலிருந்து ஜனாதிபதியாகும் வரை) உதவியாக இருக்கிறது. ஆனால் இம்முறை இது பல குழப்பங்களையும் அச்சங்களையும் ஏற்படுத்தி விட்டது.**

### தேர்வு செய்வோர் அவை (Electoral College) என்றால் என்ன?

அமெரிக்க ஜனாதிபதி, மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவது கிடையாது. மக்கள் அமெரிக்க ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்களுக்கு /தேர்வாளர்களுக்குத்தான் வாக்களிக்கிறார்கள். சரியாக சொல்வதானால், ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் நாளில் வேட்பாளர்களுக்கு அமெரிக்கர்கள் வாக்களிப்பதில்லை. பல இடங்களிலும் வாக்குச்சீட்டில் தேர்வாளர்களின் பெயர்கள் இருக்காது என்றாலும் அவர்களுக்குத் தான் மக்கள் வாக்களிக்கின்றார்கள்.

தேர்வு செய்வோர் அவை **(Electoral College)** என்பது அமெரிக்க அரசியல்மைப்பால் நிறுவப்பட்ட ஒன்று. இது வாக்காளர்களால் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் (தேர்வாளர்களை) கொண்ட ஒரு அமைப்பாகும். இது அமெரிக்காவின் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் ஒரே நோக்கத்துக்காக 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உருவாகிறது.

**தேர்வு செய்வோர் அவை (Electoral College) என்பது அமெரிக்க அரசியலமைப்பால் நிறுவப்பட்ட ஒன்று. இது வாக்காளர்களால் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் (தேர்வாளர்களை) கொண்ட ஒரு அமைப்பாகும். இது அமெரிக்காவின் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் ஒரே நோக்கத்துக்காக 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை உருவாகிறது.**

### ஏன் தேர்வு செய்வோர் அவை முறை பின்பற்றப்படுகிறது?

18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் 13 குடியேற்ற நாடுகள் இணைந்து தற்போதைய ஐக்கிய அமெரிக்காக் குடியரசு உருவான போது அக்குடியேற்ற நாடுகள் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் மாநில குடியரசுகளாக மாறின.

ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் பிரமாண்டமான அளவு மற்றும் தகவல் தொடர்பில் இருந்த சிரமங்கள் ஆகியவற்றால் ஒரு பொதுத் தேர்தலுக்கு ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் நாடு தழுவிய பிரசாரம் கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக இருந்தது.

மேலும், அந்தக் காலகட்டத்தில், அமெரிக்காவில் தேசிய அடையாளம் என்பது ஒன்றும் பெரிதாக இல்லை. மாநில அரசுகள் எல்லாம் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தன. அவை அரசியல் கட்சிகளை சந்தேகத்துடனேயே நோக்கின. இதனால் மாநில மட்டத்தில் மாநில அரசு ஊடாக தேர்வாளர்களைத் தெரிவு செய்து, தெரிவு செய்யப்பட்ட தேர்வாளர்கள் மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யும் முறை உருவானது.

### இத்தேர்வு செய்வோர் அவை அமைப்பில் உள்ள நன்மைகள் என்ன?

தேர்வு செய்வோர் அவை அமைப்பு அதன் வரலாற்று வேர்களுக்காக மிகவும் மதிக்கப்படுகிறது. மேலும், அது பெரும்பாலும் மக்களின் நேரடி வாக்குகளைப் பெற்றவர்களே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதனைப் பிரதிபலிக்கிறது.

(தொடரும்...)

# உருமாறிய கொரோனா அச்சுறுத்தல்

## நிகழ்வுகளில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை

# 50 ஆக மட்டுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

**மரணச்சடங்கு நிகழ்வுகள் அனைத்தும் 24 மணி நேரத்திற்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என பல்வேறு புதிய முடிவுகளை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

இது தொடர்பில் மருந்து வழங்கல் மற்றும் ஒழுங்கு முறைத்துறை அமைச்சர் பேராசிரியர் சன்னா ஜெயசுமன நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மரணச்சடங்கொன்றில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை வரையறுக்க தீர்மானித்துள்ளோம். அத்துடன் மரணச்சடங்கு நிகழ்வை 24 மணிநேரத்திற்குள் நடத்தி முடிக்க அறிவுறுத்தியுள்ளோம்.

அத்துடன் திருமணம் உட்பட பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ள தற்போது 150 பேர்வரை அனுமதிக்கப்படுகின்றனர். அந்த தொகையை 50 ஆக குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரவு கேளிக்கை விடுதிகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதேபோன்று கேளிக்கையாக கூடுபவர்கள் தொடர்பிலும் இரண்டொரு தினங்களில் கவனம்செலுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## முச்சக்கர வண்டி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு



(கொழும்பு)

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றவர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

நாவலப்பிட்டி ஹரங்கல பகுதியிலிருந்து கொத்மலை பகுதிக்கு சென்றுகொண்டிருந்த குறித்த முச்சக்கர வண்டி நேற்று முன்தினம் மாலை ஹரங்கல - கொத்மலை நீர்தேக்க பிரதான வீதியில் ரத்மில பிட்டிய பகுதியில் வீதியை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் நாவலப்பிட்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# அதிகரிக்கும் வாகன விபத்துக்கள்

# 24 மணி நேரத்தில் 11 பேர் பலி

(கொழும்பு)

நாடு முழுவதும் கடந்த 24 மணிநேரத்தில் பதிவான வாகன விபத்துக்களில் மொத்தம் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஐந்து மோட்டார் சைக்கிள் சாரதிகளும், நான்கு பாதசாரிகள், ஒரு சாரதியும் மற்றும் பயணியொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இதேவேளை கடந்த சில நாட்களில் நாட்டில் வாகன விபத்துக்களின் எண்ணிக்கையானது அதிகரித்து வருகின்றது.

அதன்படி அன்றாடம் 120 வாகன விபத்துக்கள் பதிவாகி வருவதாகவும், அதனால் சுமார் 40 நபர்கள் காயமடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-4)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை தொடர்பாக

## தற்போது எந்தக் கருத்தையும் வெளியிட முடியாது-கோட்டாபய

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கை தொடர்பில் எந்தவித கருத்தையும் தற்போது வெளியிட முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் மொழிபெயர்ப்பு தற்போது அச்சிடப்பட்டு வருவதுடன், எதிர்வரும் காலங்களில் இந்த அறிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஜனாதிபதி தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-4)

# செய்தித்துளிகள்

## மிலானிலுள்ள இலங்கையர்களுக்கு தொடர்ச்சியான கொன்சியூலர் சேவைகள்

(கொழும்பு)

இத்தாலியில் வசிக்கும் இலங்கையர்கள் குறித்து கவனத்தில் கொண்டு, இணைய வழி முன் நியமன முறைமையை இலங்கைப் பொதுமக்களுக்காக மிலானில் உள்ள இலங்கையின் உதவித் தூதரகத்தில் வெளிநாட்டு அமைச்சு மீண்டும் அறிமுகப்படுத்தவுள்ளது.

தற்போதுள்ள கொவிட்-19 தொற்றுநோயைத் தணிக்கும் வகையில், தேவையான சுகாதார முன்னெச்சரிக்கைகளைப் பின்பற்றி, ரோம் மற்றும் மிலானுக்கு வெளியே தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் நடமாடும் கொன்சியூலர் சேவைகளும் நடத்தப்படும்.

தற்போது நிலவும் கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோயால் ஏற்பட்டுள்ள அபாயகரமான சூழ்நிலைகளிலும் கூட, இத்தாலியில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் பொது மக்களுக்கு தொடர்ந்தும் சேவைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## விமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கொழும்பு, ஹவ்லொக் வீதியை மறித்து போராட்டம் நடத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு அமைச்சர் விமல் வீரவன்ச உள்ளிட்ட 7 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 21 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே கொழும்பு பிரதான நீதவான் புத்திக ஸ்ரீராகல இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் செய்யித் ராத் அல் ஹுசேனின் இலங்கை விஜயத்தின்போது அவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 160 | 240 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 550 | 600 |
| தக்காளி | 250 | 250 | 320 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 50 |
| கோவா | 100 | 90 | 120 | 120 |
| கரட் | 200 | 200 | 220 | 200 |
| பூசணி | 100 | 120 | 130 | 140 |
| புடோல் | 180 | 200 | 200 | 140 |
| வாழைக்காய் | 60 | 70 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 180 | 200 | 240 | 300 |
| வெண்டிக்காய் | 250 | 240 | 240 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 140 |
| பயற்றங்காய் | 180 | 200 | 280 | 200 |
| லீக்ஸ் | 150 | 120 | 150 | 160 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 200 |
| கறிமிளகாய் | 300 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | --- | --- | --- | --- |
| போஞ்சி | 150 | 130 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 160 | 140 | 200 | 160 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 6Q | 50 |
| தேசிக்காய் | 100 | 120 | 130 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 80-100 | 80-120 |
| இராசவள்ளி | 250 | 250 | 220 | 230 |
| வெங்காயப்பூ | 140 | 150 | 240 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 40 |
| வல்லாரை | 40 | 150 | 20 | 20 |
| ஈரப்பலா | 140 | 100 | 80 | 80 |

# தேவைக்கு மேல் கொள்வனவு ஆராயுமாறு முதல்வர் பணிப்பு

(நல்லூர்)

யாழ்.மாநகர சபைக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது தேவைக்கு அதிகமாக-காலாவதித் திகதியை அண்மித்த பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் களஞ்சியத்திலும் வேலைத் தளத்திலும் காணப்படும் பொருட் சேர்வு தொடர்பில் ஆராயப்பட்ட போதே இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

யாழ்.மாநகர சபையின் பெப்ரவரி மாதத்துக்கான கூட்டம் நேற்றுக்காலை மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, பொருட் சேர்வு தொடர்பாக தேவைக்கு அதிகமான முறையில் காலாவதித் திகதி அண்மித்த பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து அறிக்கையிடுமாறு யாழ். மாநகர பிரதம பொறியியலாளருக்கு முதல்வர் கட்டளை வழங்கியதுடன், வர்ணத்தீந்தை போன்ற காலாவதித் திகதி நெருங்கும் பொருட்களை முடியுமான அளவுக்கு விரைந்து பயன்படுத்துமாறும் முதல்வரால் அறிவுறுத்தப்பட்டது. (5-4-33)

# கஷ்டப் பிரதேசங்களுக்கு மருத்துவ அதிகாரி நியமனம்

(நல்லூர்)

**மத்திய சுகாதார அமைச்சினால் வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு 50 மருத்துவ அதிகாரிகள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.**



நேற்று முன்தினம் பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவிக்கையில்,

இவர்களில் யாழ்.மாவட்டத்திற்கு 13 பேரும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 9 பேரும் வவுனியா மாவட்டத்திற்கு 11 பேரும் மன்னார் மாவட்டத்திற்கு 9 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 8 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இந்த நியமனத்தில் வட மாகாணத்தின் கஷ்டப் பிரதேசங்களிலுள்ள சில வைத்தியசாலைகளுக்கும் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்த அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஊர்காவற்றுறை, அனலைதீவு வைத்தியசாலைகளுக்கும் வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், நெடுங்கேணி வைத் தியசாலைகளுக்கும் மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் சிலாவத்துறை, வங்காலை வைத்தியசாலைகளுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி, புதுக்குடியிருப்பு, அலம்பில், சம்பத்நுவர ஆகிய வைத்தியசாலைகளுக்கும் மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார். (5-4-33)

# ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞானத்துறை மற்றும் பொது ஆங்கிலப் பாடங்களுக்கு நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காகப் பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதிஅட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் , இல. 393/ 48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியுடனோ அல்லது 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ உடனடியாக தொடர்பு கொள்ளுமாறும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் சி. திருவாகன் அறிவித்துள்ளார். (5-4)

# யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் பிரத்தியேக சாரதியை நியமிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வரின் வாகனத்திற்கு, சபை சாரதி அல்லாமல் வேறு ஒரு சாரதியை நியமிப்பது தொடர்பான இடம்பெற்ற வாக்கெடுப்பு 20 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாநகர சபையின் முதல்வர் தான் தனிப்பட்ட வகையில் தனக்கு நம்பிக்கையான சாரதி ஒருவரை நியமிப்பது தொடர்பான பிரேரணை ஒன்றை சபையில் முன்வைத்தார்.

இதனை வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கலாம் என உறுப்பினர்களிடையே வாக்கெடுப்பு இடம்பெற்றது.

வாக்கெடுப்பில் 25 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 5 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

இதன்மூலம் 20 மேலதிக வாக்குகளால் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (5-4-33)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான கையுழவியந்திரம், மோட்டார் சைக்கிள், உழவியந்திரப்பெட்டி மற்றும் முச்சக்கரவண்டி என்பன எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

குறித்த பகிரங்க ஏலத்தில் பொருட்கள் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏலத்தில் பொருட்கள் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும். அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் பொருட்களை அன்றைய தினம் உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (5-4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு சந்தாதோட்டம் அருள்மிகு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 17 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (5)

# இரத்ததானம்

(குப்பிழான்)

யாழ்.மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை நிர்வாகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்த தான முகாம் இன்று 17 ஆம் திகதி புதன்கிழமை சுண்டுக்குளி சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள மேற்படி சபையின் அலுவலகத்தில் இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாமில் ஆர்வமுள்ள அனைத்துக் குருதிக் கொடையாளர்களும் தற்போதைய சுகாதார நடைமுறைகளுக்கு அமைய கலந்து கொண்டு இரத்ததானப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

# தானிய களஞ்சியத்திற்கான அடிக்கல் நாட்டி வைப்பு

(பனிக்கன்குளம்)

வடமாகாண காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத்திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதி உதவியுடன் ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பு பகுதியில் 137 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள தானிய களஞ்சியத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது.



வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ், வடமாகாண காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் செயலாளர் சிவபால சுந்தரன், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், வடமாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் வீ.பிறேம்குமார், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த.அகிலன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தனர்.

குறித்த பகுதியில் தானியக் களஞ்சியமும் அதனோடு இணைந்து நெல் உலரவிடும் தளம் என்பனவும் அமைக்கப்படவுள்ளன. விவசாயிகள் அவசரப்பட்டு குறைந்த விலைக்கு பொருட்களை விற்பனை செய்யாது உங்கள் உற்பத்தி பொருளுக்கு விலையைத் தீர்மானிப்பவர்களாக நீங்கள் மாற வேண்டும் என விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளிடம் ஆளுநர் கோரிக்கை விடுத்தார். அத்தோடு அரசாங்கம் இறக்குமதியை தடை செய்வது உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு நியாய விலையைப் பெற்றுக் கொடுக்கவே எனவும் ஆளுநர் தெரிவித்தார். (5-4-281)

இறைவன் என்றொரு கவிஞன்! அவன் படைத்த கவிதை மனிதன்! அதில் அறிஞனும் மூடனும் என்று! ஆனால் தொடக்கமும் முடிவும் ஒன்று! – கவிஞர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## இந்தியாவின் ஆறுதல் வார்த்தைகள் ஈழத் தமிழ் மக்களைக் காப்பாற்றுமா?

1983 ஜூலைக் கலவரம் இடம்பெற்றபோது இந்திய வானொலிச் செய்திகள் மட்டுமே எம் தமிழ் மக்களை ஆற்றுப்படுத்தின.

ஆஹாசவாணி, மாநிலச் செய்திகள் ஒலிக்காத தமிழர் வீடுகள் இல்லை. அந்தளவுக்கு இந்திய வானொலிச் செய்திகளூடாக கொழும்புத் தகவல்களை அறிந்து கொண்டதுடன் இந்திய மத்திய அரசு எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் என்ன என்பதையும் அறிய முடிந்தது.

அன்னை இந்திரா காந்தி அவர்கள் சிதம்பரம் கப்பலை கொழும்புக்கு அனுப்பி, ஜூலைக் கலவரத்தில் அகப்பட்டிருந்த நம் உறவுகளை மீட்டு யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்து சேர்ப்பிக்கும் பேருதவியைப் புரிந்தார்.

இலங்கை அரசாங்கத்தின் கப்பல் மூலமாக அந்தப் பணியை அன்னை இந்திரா காந்தியால் செய்வித்திருக்க முடியும்.

ஆனால் அவர் அதைச் செய்யாமல், ஈழத் தமிழ் மக்களுக்கு ஆபத்தென்றால் அதனை இந்தியா பார்த்துக் கொண்டிராது என்பதை உணர்த்தவே சிதம்பரம் கப்பலை அவர் அனுப்பி வைத்தார்.

இப்படியாக அன்று முதல் இன்றுவரை இந்தியாவை தம் உற்ற உறவாகக் கொண்டவர்கள் ஈழத் தமிழர்கள்.

வன்னி யுத்தத்தின்போது இந்திய மத்திய அரசு நம் மக்களைக் காப்பாற்றத் தவறியிருந்த போதும் இந்தியா எங்களைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையோடு நம் மக்கள் வான் வெளி பார்த்திருந்தனர் என்றால்,

இந்தியா மீதான எம் நம்பிக்கையின் உச்சம் எத்தகையதென்பதை அளவிடுவதில் கடினமிருக்க முடியாது.

இவ்வாறாக ஈழத் தமிழ் மக்கள் இந்தியாவை மலையாக நம்பியிருந்தாலும் இன்று வரை எம் அவலம் தீர்ந்தபாடில்லை.

அவலங்களின் உச்சங்களைத் தாங்கி நிற்கும் நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு வந்ததுடன் யாழ்ப்பாணத்துக்கும் வந்திருந்தார்.

இந்தியாவை நம்புங்கள். இந்தியா உங்களைக் கைவிடாது என்று அவர் எமக்கு உறுதிமொழியும் தந்தார்.

அவர் அளித்த உறுதிமொழி எமக்கு ஆறுதலையும் தேறுதலையும் தந்ததாயினும் இன்றுவரை அவரின் உறுதிமொழி வார்த்தைகளாக மட்டுமே ஒலிக்கின்றன.

தவிர, இன்னமும் செயல் வடிவம் பெறவில்லை.

இதற்கு மேலாக அண்மையில் தமிழகத்துக்கு விஜயம் செய்த பிரதமர் நரேந்திர மோடி, அங்கு உரையாற்றும்போது ஈழத் தமிழ் மக்கள் சம உரிமையுடன் வாழ்வதற்காக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்போம் எனக் கூறியிருந்தார்.

ஆக, இந்தியாவின் ஆறுதல் வார்த்தை கள் மட்டும் ஈழத் தமிழ் மக்களைக் காப் பாற்றுமா என்ன?

# பா.ஜ.க.இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டால் துறைமுகங்கள் மட்டுமல்ல ஒரு விகாரையும் மிஞ்சாது

## பாஹியன்கல ஆனந்த சாகர தேரர் பீதி

**(கொழும்பு)**

**பாரதிய ஜனதா கட்சி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டால், துறைமுகங்கள் மாத்திரமல்ல ஒரு பௌத்த விகாரையும் எஞ்சி இருக்காது என்று பாஹியன்கல ஆனந்த சாகர தேரர் தெரிவித்துள்ளார்.**

இலங்கையிலும் பாரதிய ஜனதா கட்சியானது ஆட்சியமைக்கும் என்று வெளியான தகவல்களால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் தகவல் வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் பேசிய அவர்,

இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சியை இலங்கையில் ஆரம்பித்து, அந்தக் கட்சி நாட்டில் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிட்டால், அது வைரஸாக மாறிவிடலாம்.

மலையகத்தின் அரசியலை இந்தியாவே கையாள்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கூட இந்தியாவே கையாண்டு வருகின்றது.

20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் நாட்டில் அரசியலில் ஈடுபட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது இந்தியாவின் அரசியல் தேவையை நிறைவேற்றும் நடவடிக்கை அல்லவா?.

பாரதிய ஜனதா கட்சி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டால், துறைமுகங்கள் மாத்திரமல்ல ஒரு பௌத்த விகாரையும் எஞ்சி இருக்காது எனத் தேரர் தெரிவித்தார். (நி-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி யிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** மாமுனையிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** குடாகச்சக் கொடிய கிராமம், சமணன்குளம் கிராமம், சின்னசிப்பிக் குளம். ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** கரைசலிலிருந்து தல்லமன்னார் வரை, Palmyrah house கரைசல், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், Palmyrah house தலைமன்னார் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** காலை 9 மணியிலிருந்து மாலை ஒரு மணி வரை உயிலங்குளத்திலிருந்து சிறுநாவற்குளம் வரை, கமலாம்பிகை அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

## ஏழு மீனவர்களுடன் சென்ற படகு மாயம்

(திருமலை)

திருகோணமலை துறைமுகத்திலிருந்து கடலுக்கு சென்ற நீண்ட நாள் ஆழ்கடல் மீன்பிடிப் படகொன்று காணாமல் போயுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

'சாகர குமார 4' எனப்படும் ஆழ்கடல் மீன்பிடிப் படகே இவ்வாறு காணாமல் போயுள்ளது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி குறித்த படகில் 7 மீனவர்கள் கடலுக்கு சென்றுள்ளதுடன், மீனவர்களிடமிருந்து கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் எவ்வித தொடர்புகளும் இல்லை என உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் கடற்றொழில்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் உதித கம்ஹேவாவிடம் வினவியமைக்கு, மியன்மார் கடற்பரப்பில் அந்நாட்டு பாதுகாப்பு பிரிவினரால் குறித்த படகு கைப்பற்றப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக தெரிவித்தார்.

மியன்மாரில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையினால் இது தொடர்பிலான மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# திருவள்ளுவரின் ஆன்மீகச் சிந்தனைகள்



## மறந்தும் தீங்கு நினைக்காதீர்கள்

❖ சரியான நேரத்தில் காலம் கருதிச் செய்யும் உதவி அளவில் சிறியதாக இருந்தாலும் அதன் மதிப்பு இந்த பரந்த உலகத்தைக் காட்டிலும் பெரியதாகும்.

❖ பகைவரால் உண்டாகும் தீங்கினைவிட, ஒருவன் கொண்ட பொறாமை குணமே அவனுக்கு தீங்கு தரப் போதுமானது. பொறாமை குணம் கொண்டவனை அழிக்க வெளியில் வேறு பகை தேவையில்லை.

❖ மனம் வருந்தக்கூடிய கொடுஞ்சொற்களைக் கூறுவதைக் காட்டிலும் பயனற்ற சொற்களைப் பேசுதல் குற்றமாகும்.

❖ மறந்தும்கூட பிறருக்கு தீங்கு எண்ணாதீர்கள். திட்டமிட்டு பிறருக்குத் தீங்கு செய்பவர்களுக்கு கடும் தண்டனை கிடைக்கும்.

❖ தனக்கு உண்டாகும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்வதும், எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமல் இருப்பதுமே தவத்தின் இலக்கணமாகும்.

❖ மனதில் வஞ்சக எண்ணங்களை எண்ணிக் கொண்டு, ஒழுக்கம் கொண்டவன் போல் நடிப்பவனைக் கண்டு அவன் உள்ளத்தில் இருக்கும் இறைவன் சிரிப்பான்.

❖ குற்றமற்ற நன்மை பிறருக்கு கிடைக்கும் என்றால், அதற்காகப் பொய்யைக் கூட சொல்லலாம். அப்பொய்யும் உண்மையைப் போலவே ஆகும்.

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2021-13.03.2021



சிம்ம இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன், விரயாதிபதி சந்திரனோடு இணைந்து சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே குடும்பத்தில் சுபச்செலவுகள் அதிகரிக்கும். யோககாரகன் செவ்வாய் பலம் பெற்றிருப்பதால் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

### கூட்டுக்கிரக சேர்க்கை

உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் குரு, சனி, புதன், சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. குரு நீசம் பெற்று சனியோடு இணைந்திருப்பதால் நீச்ச பங்க இராஜயோகம் ஏற்படுகிறது. மேலும் புத-சுக்கிர யோகமும் ஏற்படுகின்றது. எனவே பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு புதிய முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள் நனவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் கிடைப்பதற்கான வாய்ப்பு கைகூடிவரும். அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### மகர புதனும், கும்ப புதனும்

மாதத் தொடக்கத்தில் புதன் மகர இராசியில் சஞ்சரிக்கின்றார். வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். பெப்ரவரி 14 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு தன-லாபாதிபதியாக விளங்கும் புதன் வக்கிர நிவர்த்தியாவது யோகம்தான். பொருளாதார பற்றாக்குறை அகலும். குழந்தைகளின் கல்வி மற்றும் மேற்படிப்பு சம்பந்தமாக நீங்கள் எடுத்த முயற்சி பலன்தரும். மார்ச் 7 ஆம் திகதி கும்ப இராசிக்கு புதன் செல்கின்றார். தன-லாபாதிபதியான புதன் சப்தம ஸ்தானத்தில் இருந்து உங்கள் இராசியைப் பார்க்கும் பொழுது, பொருளாதாரம் மேம்படும். பொதுவாழ்வில் புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

## தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

### ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பெப்ரவரி 18 ஆம் திகதி தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். எனவே நல்ல சந்தர்ப்பங்கள் கைகூடி வரும். தொழிலில் வெற்றி நடைபோடுவீர்கள். உயர்மட்ட அதிகாரிகளின் பழக்கத்தால் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிபிறக்கும். சொத்துக்களால் ஆதாயம் உண்டு. உடல்நலம் சீராகும்.



சிம்மம்

மகம்,
பூரம்,
உத்திரம்
1-ம் பாதம்,

### மகர குருவின் சஞ்சாரம்

மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீச்சம்பெற்றுச் சஞ்சரிப்பது ஒரு வழிக்கு நன்மை தான். உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியானவர் குரு. எனவே இக்காலத்தில் சில நன்மைகளும் நடைபெறும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பெப்ரவரி 21 ஆம் திகதி குரு அஸ்தமன நிவர்த்தி பெறுவதால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

### கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், பெப்ரவரி 22ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கின்றார். எனவே மிகுந்த முன்னேற்றம் ஏற்படும். புதிய முதலீடுகள் செய்து தொழிலை விரிவுபடுத்த முயற்சிப்பீர்கள். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். அடகு வைத்த நகைகளை மீட்டு, அணிந்து அழகு பார்க்கும் யோகம் உண்டு. சகோதர வர்க்கத்தினரின் இல்லங்களில் நடைபெறும் சுபகாரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். இம்மாதம் வியாழன் தோறும் குரு பகவானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும். நல்லவர்களின் தொடர்பால் இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். கணவன்-மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். உடன் பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் எதிர்பார்த்தபடி கிடைக்கும். நந்தி வழிபாடு நன்மை தரும்.



கன்னி இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். அவரோடு குரு, சனி, சுக்கிரன் ஆகிய மூன்று கிரகங்களும் இருக்கின்றன. அதேநேரத்தில் அஷ்டமத்தில் செவ்வாய் வலுப்பெற்றிருக்கின்றார். எனவே உடல் நலத்தில் கவனம் தேவைப்படும். விரயாதிபதி சூரியன் 6ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் செலவுகளைச் சமாளிக்க முடியாத சூழ்நிலை உண்டு.

### கூட்டுக்கிரக சேர்க்கை

உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்தில் புதன், வியாழன், சனி, சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. வியாழன் நீசம்பெற்ற சனியோடு இணைந்து நீச்ச பங்க இராஜயோகத்தில் இருப்பதால் பிள்ளைகளால் பெருமை சேரும். அவர்களின் எதிர்கால நலன் கருதியும், மேற்படிப்பு சம்பந்தமாகவும் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புத, சுக்கிர யோகம் இருப்பதால் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். வெளி நாட்டில் இருந்து நல்ல தகவல் வரும்.

### மகர புதனும், கும்ப புதனும்

மாதத் தொடக்கத்தில் புதன் மகர இராசியில் சஞ்சரிக்கின்றார். வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். பெப்ரவரி 14ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். இதனால் நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறும். பொன், பொருட்கள் மட்டுமல்லாமல் பூமியும் வாங்கும் யோகம் உண்டு. மார்ச் 7ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்கின்றார். எனவே உத்தியோகம் சம்பந்தமாக நீங்கள் எடுத்த முயற்சிகள் பலன் தரும். புத ஆதித்ய யோகம் செயற்படும் இந்த நேரத்தில் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

## செலவுகளை சமாளிக்க முடியாத நிலை ஏற்படும்

### ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சஞ்சரித்து அதிக தொல்லைகளைக் கொடுத்து வந்த செவ்வாய், பெப்ரவரி 18 ஆம் திகதி 9 ஆம் இடத்திற்கு செல்கின்றார். பாக்கிய ஸ்தானத்தை பலப்படுத்தும் செவ்வாயால் தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். பாகப் பிரிவினை நடைமுறைப்படுத்தப்படும். கடன் சுமை குறைய புதிய வழிபிறக்கும்.



கன்னி

உத்திரம்
2,3,4-ம் பாதம்,
அஸ்தம்,
சித்திரை
1,2-ம் பாதம்

### மகர குருவின் சஞ்சாரம்

மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீச்சம் பெற்று சஞ்சரிப்பது ஒருவழிக்கு நன்மை தான். சனியோடு இணைந்து நீச்சபங்க இராஜயோக அமைப்பிலும் விளங்குகின்றார். அதே நேரத்தில் பெப்ரவரி 21ஆம் திகதி அஸ்தமன நிவர்த்தியாகின்றார். அவரது பார்வை உங்கள் இராசியில் பதிவது மிகுந்த யோகம் தரும். குறிப்பாக ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். நண்பர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட உபத்திரவங்கள் அகலும்.

### கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், பெப்ரவரி 22 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 6ஆம் இடத்திற்கு வரும் பொழுது உத்தியோகத்தில் முன்னேற்றங்கள் ஏற்படும். பணிபுரியும் இடத்திலிருந்து வி.ஆர்.எஸ். பெற்று வெளியில் வரவேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக்கொள்வீர்கள். தடைக்கற்களை படிக்கற்களாக மாற்ற இக்காலத்தில் குலதெய்வ வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. இம்மாதம் திருவாதிரை திருநாளில் நடராஜப் பெருமானை வழிபடுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பணப்பற்றாக்குறை அகலும். பாக்கிகள் வசூலாகும். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதியும், மேற்படிப்பு சம்பந்தமாகவும் எடுத்த முயற்சிகள் பலன் தரும். தாய்வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு மாதத்தின் பிற்பாதியில் எதிர்பார்த்த இலாகா மாற்றமும், கேட்ட சலுகைகளும் கிடைக்கும்.

(தொடரும்...)

## தடுப்பூசி செலுத்...

சுகாதார சேவை ஊழியர் ஒருவரே இவ்வாறு கோவிட் தொற்றுக்குள்ளாகியுள் ளார் என தெரியவந்துள்ளது.

கனேமுல்ல பிரதேசத்தை சேர்ந்த சுகாதார சேவை ஊழியர் ஒருவரே இவ்வாறு கோவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

கோவிட் தடுப்பூசிஜலுத்திய இரண்டுவாரங்களுக்குள் அவருக்கு கோவிட் வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது. (ம-3)

## ஆசிரியை உள்ளி...

வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 444 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 3 பேருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 374 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோத னையில் 2 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பேருந்துகளில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இருவருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதில் பூநகரியிலுள்ள பாடசாலையொன்றில் கடமையாற்றும் யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவருக்கும் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அதேபோன்று மன்னாரிலிருந்து பேருந்தில் யாழிற்கு வந்தவர்களுக்கு மேற் கொள்ளப்பட்ட பரிசோதனையில் அதிலும் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தில் மூவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர்கள் ஆடைத் தொழிற்சாலையொன்றில் கடமையாற்றுபவர்கள் எனவும் சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார். (ம-3,18,316)

## பலி 6...

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 409 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் நாட்டில் நேற்றும் +756 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 77 ஆயிரத்து 184 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## யாழ்.செம்மணி...

இரவு யாழ்ப்பாணத்திலிருந்து செம்மணி வீதி ஊடாக துவிச்சக்கரவண்டியில் பயணித்த முதியவர் ஒருவர் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளார்.

முதியவர் உயிரிழந்த நிலையில் சடலமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டார்.

அவருடன் விபத்துக்குள்ளாகிய மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் முதியவரின் சடலத்தை அடையாளம் காணுமாறு கோரப்பட்டுள்ளது. சுமார் 65 வயது மதிக்கத்தக்க பொதுநிறமுடைய ஒருவரே உயிரிழந்து சடலமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,33)

## ரூ.9 இலட்சத்து...

ரம் ரூபாய் பணம் கொள்ளையிடப் பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில்,

நேற்றுமுன்தினம் விவசாயிகளிடமிருந்து நெல்லினை கொள்வனவு செய்வதற்காக ஒருதொகைப்பணத்துடன் நபர் ஒருவர் சென்றபொழுது அவரை புளியங்குளம் முல்லைத்தீவு பிரதான வீதியில் வழிமறித்த குழுவினர் அச்சுறுத்தி அவரிடமிருந்த 9 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபரால் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

## இந்தியாவுக்கு...

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

தனது ஆட்சியின்போது தான் சகல நாடுகளுடனும் இணங்காத வகையிலான கொள்கையை கடைப்பிடித்ததாகவும் எந்த வொரு நாட்டுக்கும் தான் அடிபணியவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உயரிரை பணயம் வைத்து கட்டியெழுப்பப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இன்று சரிவை எதிர்நோக்கியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# கொரோனாவுக்கு மத்தியிலும் அபிவிருத்திகள் தொடரும்

## பிரதமர் மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)

கோவிட்-19 வைரஸ் பரவலின் மத்தியிலும் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தடையின்றி தொடரும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாண கால்வாய் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் ஆரோக்கியமான மக்கள் தொகையை உருவாக்குவதற்கும், உள்ளூர் உற்பத்திகளுக்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு தன்னிறைவான பொருளாதாரத்தை உருவாக்குவதற்குமான நடவடிக்கையையே அரசாங்கம் மேற் கொள்கின்றது.

யுத்தத்தின்போது கூட நாங்கள் நாட்டை அபிவிருத்தி செய்தோம்.

அதேபோல கோவிட்-19 தொற்றுக்கு மத்தியிலும் அபிவிருத்திகளை நிறுத்த மாட்டோம்.

நோய்வாய்ப்பட்ட உலகத்தின் மத்தியில் ஆரோக்கியமான அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவதே அரசாங்கத்தின் நிலைப்பாடு என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-3)

## தொடர் வாந்தி...

வாந்தி எடுத்த இளைஞன் ஒருவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இதில் நல்லூர், வைமன் றோட் பகுதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கேசவன் (வயது-32) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் நேற்றுக் காலை தொடர்ச்சியாக வாந்தி எடுத்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்

இவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கெனவே இவர் உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர். எனினும் உயிரிழந்தமைக்கான காரணம் தெரியாமையால் இவரது உடல் உறுப்புக்கள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## காரை...

கிராமசேவகர் பிரிவில் உள்ள அரை ஏக்கர் காணியொன்றே, கடற்படையினரின் தேவைக்காக அபகரிக்கப்படவுள்ளது.

காரைநகர் எலாரா கடற்படை தளத்திற்கு அபகரிக்கப்படவுள்ள இந்த காணியின் அளவீட்டு பணிகள் இன்று காலை 8.30 மணிக்கு நில அளவைத் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

காரைநகர் பாடசாலை ஒன்றுக்கு சொந்தமான இந்த காணியை அபகரிப்பதற்கு எதிராக இன்று பிரதேச மக்களும் அரசியல் கட்சிகளும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட திட்டமிட்டுள்ளனர். (ம-3)

## யாழைச் சேர்ந்த...

கரையொதுங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 55 வயதுடைய ஆர்.கண்ணன் என்பவரே இவ்வாறு கரையொதுங்கியுள்ளார்.

மற்றைய இருவரும் கடலில் உயிரிழந்து விட்டதாக மாலைதீவு கடற்படைத் திணைக்களம் இலங்கை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (ம-3)


மெகா பவர்
திகதி 16/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0767
S 11 20 46 58 80

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/02/16
சீட்டிழுப்பு இலக்கம் 1575
சுப்பர் இலக்கம் 03
வெற்றி இலக்கங்கள் 03 28 32 44

மஹஜன சம்பத
திகதி 2021/02/16
சீட்டிழுப்பு இலக்கம் 4400
G 7 8 7 6 9 7

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 16.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2695
F 14 17 20 70

தன நிதானய
திகதி - 2021.02.16
சீட்டிழுப்பு இலக்கம் - 437
S 08 28 32 80

அத கோடிபதி
தினம்: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1196
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 16.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 108,812,850
வெற்றி இலக்கங்கள் 36 40 68 71 T
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
தினம்: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 3526
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 16.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,029,569
வெற்றி இலக்கங்கள் 03 29 67 68 M
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி: 16.02.2021
வெற்றி வாரம்: 3077
வர்ணம்: சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 21 22 39 52
மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 16,159,170

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1370
நிறம் இளநீலம்
சீட்டிழுப்பு திகதி 16/02/2021
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
T 16 30 61 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் 69,223,791/=

L 19 31 51 76
691
16.02.2021
செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,381,585
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# வடக்கில் பேரணி சென்றவர்களை கைது செய்ய அரசு முயற்சி

## லக்ஷ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்த அரசாங்கம் வடக்கில் போராட்டம் நடத்தியதற்காக அவர்களை கைது செய்ய முயற்சிக்கிறது. தெற்கில் உள்ளவர்களிற்கு ஆணைக்குழுக்களை அமைத்து அவர்களின் குடி உரிமைகளை பறிக்க முயல்கிறார்கள் என எதிர்க்கட்சி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முந்தைய அரசாங்கங்களின் தவறுகளை மீண்டும் செய்ய வேண்டாம். வடக்கில் பேரணி சென்றதற்காக அவர்களைக் கைது செய்ய முயற்சிக்கின்றனர். தெற்கில் உள்ளவர்கள் மீது அரசியல் பழிவாங்கல்களை செய்ய முயற்சிக்கின்றனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கால் நடையாக பயணம் சென்றபோது, ஜனாதிபதி பிரேமதாச பாதுகாப்பு அளித்தார். புத்திசாலித்தனமான தலைவர்கள் அதைத்தான் செய்கிறார்கள். ஆனால் இன்றைய ஆட்சியாளர்களிற்கு ஜனநாயக போராட்டங்கள் எரிச்சலூட்டுகிறது. ஜனநாயக உரிமைகள் அனுமதிக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தில் பேசும் போது தமிழர்களையும் முஸ்லிம்களையும் அவமதிப்பது தவறு.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல் தடுப்புக் குழுக்களும் இருந்தன. அவர்கள் நீதிமன்றம் செல்லவில்லை. அவர்கள் செய்ததெல்லாம் தகவல்களைத் தேடுவது மட்டுமே. அரசாங்கங்களின் தவறுகளால் கடந்த காலத்தில் போர் வெடித்தது. நம் நாடு இப்போது மியன்மாரை போன்ற நிலைமைக்கு நகர்கிறது என்பது தெளிவாகிறது. மியன்மாரில் நடப்பதை போன்ற சூழலுக்கு நமது நாடும் அடித்தளம் அமைத்து வருகிறது. ஒவ்வொரு நிறுவனத்திலும் ராணுவ அதிகாரிகள் நிறுத்தப்பட்டுள்ளனர் என்றார். (ம-03)


**மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு**

2017 TVS Wego மோட்டார் சைக்கிள்கள்
இரண்டு விற்பனைக்கு உண்டு.
(BEY | BEV) (5801)
077 898 9691
யாழ்ப்பாணம்

**Study in EUROPE**

MBBS | Engineering | IT | Management
ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு



- நீங்கள் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவரா?
- IELTS இன்றி உயர் கல்வியினை தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்.
- கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
- கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை.
- 100% விசா உத்தரவாதம்.
- குறைந்த பாட நெறி கட்டணம்
- Schengen visa

(C-1449)

100% Scholarships Available in ITALY & CHINA

ICS A Complete Visa Solutions Study Abroad
Admissions :- 076 000 5554 | 076 7013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி யாழ்ப்பாணம்;
( பெருமாள் கோவில் அருகாமையில் ) 021 492 6222
107 B 1/1 . Galle Road . Colombo 6. 011 434 3322

**வாடகைக்கு**

முருகேசு கட்டடம், ஏ9 வீதி,
கரடிப்போக்கு, கிளிநொச்சியில்
இரண்டு கடைகள்
வாடகைக்கு விடப்படும். (5623)
076 335 4057

**வேலை வாய்ப்பு**

யாழ். நகரில் இயங்கிவரும் புடவை நிறுவனம் ஒன்றிற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.
( தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.)
தொடர்பு (5806)
077 855 4840

**காணி விற்பனைக்கு**

செம்மணி வீதியில் நாயன்மார்கட்டு கேணியடியில்
10 பரப்புக் காணி விற்பனைக்கு.
இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
( ஒரு பரப்பின் விலை 5 இலட்சம். ) (5698)
077 288 0152
077 505 8561

**கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்**

வாடிக்கையாளர்களுக்கு! 01.01.2021 தொடக்கம் இயங்கிவரும் பிளாஸ்ரிக் பொருட்கள், அலுமினியப் பொருட்கள், தையல் உபகரணங்கள், பாடசாலை உபகரணங்கள், சில்வர் பொருட்கள், கவறிங் வகைகள், பான்சி வகைகள், பட்டின் வகைகள், செருப்பு வகைகள் அனைத்தும் பெற்றுக்கொள்ளமுடியும்.

சரவணபவன் பான்சி கவுஸ்
26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
யாழ்ப்பாணம். (5803)
077 468 3354



**அந்தியேட்டிக் கிரியையும் வீட்டுக்கிருத்திய அழைப்பு**



திருமதி அன்னபாக்கியம் கனகலிங்கம்
(N.S.K சுருட்டுக் கம்பனி, கோண்டாவில்)

கடந்த 20.01.2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.02.2021) புதன்கிழமை காலை 10.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (19.02.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் இடம்பெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்களின் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (5802)

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குளங்கரை ஒழுங்கை, 077 604 2630
கோண்டாவில். 077 614 3412 குடும்பத்தினர்

**மாபெரும் கல்வி கருத்தரங்கு**

G.C.E (O/L) 2021 (2020) March
பரீட்சைக்கான
இரண்டாம் மொழி சிங்களம்
மிகத்துரித மீட்டல் வினா -விடை வகுப்புக்கள்
பரீட்சையை நோக்கிய தயார் படுத்தல்அடிப்படையிலிருந்து விளக்கமளிக்கப்படும்

ஆரம்பம்
20 . 02 . 2021 21 . 02 . 2021
27 . 02 . 2021 28 . 02 . 2021
Sat & Sun 09.00am - 12.00 pm & 01.00pm - 4.00pm

அனுமதிக்கட்டணம் முற்றிலும் இலவசம் கல்விக்கட்டணம் மட்டும் அறவிடப்படும்.
அச்சடித்த குறிப்புக்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்
பிரபல ஆசிரியர் :- Mr. A. K. Moorthy MA, MEd, MPhil
Diploma in Translation and Interpretation
(Sinhala -Tamil) (University of Kalaniya,Sri lanka)
Higher Diploma in Trilingual Studies
(Tamil - Sinhala - English)) (University of Kalaniya , Sri lanka))
அனுமதியை பெற்றுக் கொள்ளுங்கள்

THE SCIENCE CORNER A/L BIO, MATHS CLASSES
9 Clock Tower Lane, Jaffna. (5804)
076 545 6118

**அண்ணா EXPRESS Courier Service**
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள் லண்டன் 1000/= 070 3305500 075 3305500 (C-1418)

| 976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு |
|---|---|---|---|

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-1374)
0768226240 DHL

**விற்பனைக்கு**

யாழ். பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் ரக்கா லேனில் 10 பரப்பு காணியும் வீடும் (விலை 5 கோடி ரூபாய் ), யாழ். திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் கலாசாலை வீதியில் 10 பரப்புக் காணி ( விலை 2 கோடி ரூபாய் ), யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 5 பரப்பு காணி (விலை 3 கோடி ரூபாய் ), யாழ். கே.கே.எஸ் வீதியில் நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில் 10 பரப்புக் காணி ( விலை 15 கோடி ரூபாய் ), கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளையில் 60 பரப்புக் காணி ( விலை 3 கோடி ரூபாய் ), யாழ். பிறவுண் வீதியில் 4 பரப்புக் காணி (5 கோடி ரூபாய் ), யாழ். கோவில் வீதியில் 4 பரப்புக் காணி ( விலை 6 கோடி ரூபாய் ), யாழ். கந்தப்பு சேகரம் வீதியில் 10 பரப்புக் காணி ( விலை 20 கோடி ரூபாய் ), யாழ். பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் 3 பரப்புக் காணியும் வீடும் ( 4 கோடி ரூபாய் ), யாழ். கந்தர்மடச் சந்திக்கு அண்மையில் 5 பரப்புக் காணி ( விலை 5 கோடி ரூபாய் ) யாழ். பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி விதீயில் 6 பரப்புக் காணி (விலை 9 கோடி ரூபாய் ) (5805)

077 723 2535


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.